Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 19, 2021

செவ்வாய்க்கிழமை ஒக்டோபர் 19, 2021 | ஒளி: 07 கதிர்: 130 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## மீலாத்துன் நபி தின வாழ்த்துகள்




உலகளாவிய ரீதியில் இன்று (19) நபி பிறந்த நாளைக் கொண்டாடும் முஸ்லிம்களுக்கு, 'தமிழ்மிரர்' சார்பில் எங்களுடைய வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கின்றோம். ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தலைவர்களும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

வாழ்த்துச் செய்திகள் P3

# நனோ நைதரசன் திரவ உரம் இறக்குமதி



இந்தியாவில் இருந்து 2.9 பில்லியன் ரூபாய் (290 கோடி ரூபாய்) பெறுமதியான 3.1 மில்லியன் லீற்றர் நனோ நைதரசன் திரவ உரத்தை (பசளை) இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (18) காலை நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 1 இலட்சம் லீற்றர் நனோ நைதரசன் திரவ உரம், சரக்கு விமானத்தின் மூலம் இன்றையதினம் (19) நாட்டை வந்தடையவுள்ளது என்று விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

உரம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக, அரசாங்கத்துக்கு எதிராக விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதால், பெரும்போகத்துக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உரத்தை விமானம் மூலம் கொண்டுவரவுள்ளதாக, சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

99 நாள்கள் போராட்டம் கைவிடப்பட்டது

# 25 முதல் கடமை

## அதிபர்- ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

கடந்த 99 நாள்களாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள், அதிபர்கள் தங்களுடைய போராட்டத்தை கைவிட்டு, எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் கடமைக்கு சமூகமளிக்கவுள்ளனர்.

தொடர்ச்சி P2

# உக்கிரமடைகிறது உரப் பிரச்சினை



உரம் இன்றி

## உழவு இல்லை

### மண்வெட்டியுடன் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டங்கள்

வ.சக்தி, வா.கிருஸ்ணா, க.விஜயரெத்தினம்

விவசாயத்துக்கான உரத்தை வழங்கக் கோரி, மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நேற்று (18) முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



மரக்கறிகளை

## பிடுங்கி எறிந்தனர்

எம்.கிருஸ்ணா

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மௌசாஎல்ல தோட்டத்தில் விவசாயிகளும் தோட்டத் தொழிலாளர்களும் நேற்று (18) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தொடர்ச்சி P2



"இரசாயன உரத்தை நிறுத்தி

## பசியைத் தேடாதே"

எம்.றொசாந்த், சண்முகம் தவசீலன் எஸ் தில்லைநாதன், க. அகரன், செந்தூரன் பிரதீபன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

விவசாயிகளின் தற்காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கக் கோரி, வடக்கு - கிழக்கில் உள்ள கமநல சேவை நிலையங்கள் முன்பாக, நேற்று (18), கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



கொரோனா குறையும் வரை

## பொதுப் போக்குவரத்தை பிற்போடவும்

கொரோனா தொற்றை கணிசமாகக் கட்டுப்படுத்தும் வரை, பொதுப் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிப்பதை மேலும் பிற்போட வேண்டும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் மாடுகளை மோதிய ரயில்

### பத்து மாடுகள் துடிதுடித்துப் பலி

சுப்பிரமணியம் பாஸ்கரன்

அறிவித்தலின்றி பயணித்த ரயிலில், மோதுண்டு 10க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்த சம்பவமொன்று, நேற்று (18) காலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆசைப்பிள்ளை ஏற்றம் பகுதியில், இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

பாடசாலைக்கு மாணவர்கள் வருகையில்

## ஆசிரியர்கள் இல்லாத சூழல் உருவாகாது

### வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை



மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மேலும் வீழ்ச்சியடையச் செய்யாமல், எமது தீர்வை ஆசிரியர்கள், அதிபர்கள் ஏற்கும்படி கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், 21ஆம் திகதி மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போது, ஆசிரியர்கள் இல்லாத சூழல் உருவாகாது என்றார்.

தொடர்ச்சி P2



## புதிய அரசியல் கூட்டணிக்கு மைத்திரி புது வியூகம்

புதிய அரசியல் பயணம் ஒன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருகிறது.

இதற்கமைய புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அக்கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர அறிவிப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அச்சுறுத்தலால் உரும்பிராய் போராட்டம் கைவிடப்பட்டது

செந்தூரன் பிரதீபன்

விவசாயிகள் எதிர்கொள்ளும் உரப் பிரச்சினை, கிருமிநாசினி இல்லாமல் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில், நேற்று (18) காலை முதல், விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தொடர்ச்சி P2



இயற்கை விவசாயத்துக்கு

## மாறுவதற்கு ஒத்துழைப்போம்

செந்தூரன் பிரதீபன்

எமது நிலங்கள் இரசாயன பசளைகளுக்கு இசைவாக்கம் பெற்றுள்ளன. உடனடியாக அசேதனப் பசளைக்கு ஒரே இரவில் மாறுவது என்பது விவசாயிகளால் முடியாத காரியம் என, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மனம் கசந்த பங்காளிகளே போராட்டத்துக்கு வாருங்கள்

அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்கள் கூட, அரசாங்கத்தை விமர்சிக்க ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அவ்வாறானவர்கள் அரசாங்கத்தின் பொறுப்புகளிலிருந்து விலகி, வெளியே வந்து அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென அழைத்தார்.

தொடர்ச்சி P2

யுகதனவி மின்னிலைய சர்ச்சை



## மதகுருக்கள் இருவரால் மனுத்தாக்கல்

கெரவலப்பிட்டி, யுகதனவி மின் நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனமான நியூ போட்ரஸ்க்கு வழங்குவதற்கு எதிராக, பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, வணக்கத்துக்குரிய எல்லே குணவன்ச தேரர் ஆகியோரால், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று (18) தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2

## பங்காளிக் கட்சிகளின் அறிவிப்பு விரைவில்

கெரவலப்பிட்டி, யுகதனவி மின் நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பான, தங்களது கருத்துகளை நாட்டுக்கு அறிவிக்க அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நனோ நைதரசன் திரவ உரம் இறக்குமதி

பெரும்போகத்துக்காக 800,000 ஹெக்டேயரில் நெல் பயிரிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் சேதன உரங்களின் பற்றாக்குறையால் அவற்றில் 500,000 ஹெக்டேயர் விவசாயம் பாதிக்கப்படலாம் என்றும் குறிப்பிட்டார். இலங்கை தாவர தனிமைப்படுத்தல் அதிகாரசபையால் பரிசோதிக்கப்பட்ட சீன பசளை மாதிரிகளில் தீங்கு விளைவிக்கும் பற்றீரியாக்கள் காணப்பட்டதால், சீனாவில் இருந்து சேதன நைதரசனை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கத்தின் ஆரம்ப நடவடிக்கை தோல்வியடைந்தது என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சேதன விவசாயமாக மாற்றப்படுவதால் விளைச்சலில் 10-20 சதவீத குறைவு எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 25 முதல் கடமை

இதனை ஆசிரியர் - அதிபர்கள் தொழிற்சங்கங்கள் சில நேற்று (18) உறுதிப்படுத்தின. 200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என்றாலும் அன்றையதினம் பாடசாலைக்கு சமூகமளிக்காது தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

“ 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கப்படும்” என்று அகில இலங்கை ஒன்றிணைந்த ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யால்வெல பஞ்சாசேகர தேரர், தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இலங்கை அதிபர் சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்னாண்டோ தெரிவிக்கையில், நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளின் அதிபர்களும் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் கடமையாற்றத் தீர்மானித்துள்ளனர் என்றார்.

தரநிலையில் இருக்கும் அதிபர்கள் இம்மாதம் 25 ஆம் திகதி முதல் பணிக்கு வருவார்கள் என்றும், சம்பளப் பிரச்சினையைத் தீர்க்கவும், ஊழியர் சேவையின் சலுகைகளைப் பெறவும் உதவித் தலைமையாசிரியர்கள் தொடர்ந்து போராடுவார்கள் என்றார்.

ஆசிரியர்-அதிபர் சேவை மூடப்பட்ட சேவையாக மாற்றப்படும் என்று கூறிய ஆசிரியர் மற்றும் அதிபர்கள், அரசாங்கம் தொடர்ந்து ஏமாற்றிவருகின்றது என்றனர்.

இதேவேளை, தாம் தொடர்ந்தும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் - அதிபர்கள் சம்பள முரண்பாட்டிற்கு எதிரான தேசிய ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உலப்பனே சுமங்கல தேரர் குறிப்பிட்டுள்ளார்.

சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக் கோரி ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் நிகழ்நிலையில் (ஒன்லைன்) கற்பிப்பதில் இருந்து விலகி 99 நாள்கள் ஆகிவிட்டன.

## உழவு இல்லை

விவசாயிகளின் ஒத்துழைப்புடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். வெல்லாவெளி கமநல பிரிவுக்கு முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

“அரசே உடன் உரம் வழங்க வேண்டும், “விவசாயிகளுக்கு ஒளி வேண்டும்”, “மண் வளத்தை மாற்றானுக்கு விற்பனை செய்வதை நிறுத்து”, “உரம் இன்றி உழவு இல்லை”உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே போன்ற ஆர்ப்பாட்டங்கள், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொக்கட்டிச்சோலை, ஆயித்தியமலை, வந்தறுமூலை மற்றும் கிரான் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ள கமநல கேந்திர நிலையங்களுக்கு முன்னாலும் பரவலாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ‘பசியைத் தேடாதே’

அதில் ஓர் அங்கமாக, வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் - வலிகாமம் கிழக்கு, வடமராட்சி, முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு, துணுக்காய், வவுனியா - இலுப்பையடி ஆகிய பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வலிகாமம் கிழக்கு:

வலிகாமம் கிழக்கு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில், புத்தூர், உரும்பிராய் கமநல சேவை நிலையங்களுக்கு முன்பாக, நேற்று முற்பகல் 9.15 மணியளவில், கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்றுள்ளார்.

வெங்காய இறக்குமதியை முற்றாகத் தடை செய், விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசிகளை போதியளவு கிடைக்க வழி செய், உருளைக்கிழங்கு அறுவடை காலத்தில் உருளைக்கிழங்கு இறக்குமதியை தடை செய் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி:

வடமராட்சி பிரதேசத்தில், கரவெட்டி, புலோலி, அம்பன் கமநல சேவை நிலையங்களுக்கு முன்பாக விவசாயிகளால் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கரவெட்டி கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற கண்டன போராட்டத்தின் போது, விவசாயிகள் தோட்டங்களில் இருந்து பெயர்த்துக் கொண்டு வந்த மிளகாய், கத்தரி செடிகளை போராட்டக் காட்சிப் பொருளாக வைத்திருந்தனர்.

இந்தப் போராட்டங்களில், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் தினேஷ், பிரதேச சபை உறுப்பினர்களான க.காந்தரூபன், தியாகலிங்கம், பிரசாத், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், க.தர்மலிங்கம் உள்ளிட்டோருடன் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

மாந்தை கிழக்கு, துணுக்காய்:

துணுக்காய், பாண்டியன்குளம் விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில், துணுக்காய், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையங்களுக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில், பாண்டியன்குளம் கமநலசேவை நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளால் பிரதேச விவசாய போதனாசிரியரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது

கொல்லாதே கொல்லாதே விவசாயிகளை கொல்லாதே, விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசிகளை போதியளவு கிடைக்க வழி செய், உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலுப்பையடி:

இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநலசேவை நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் ‘எரிபொருள்களின் விலையை உயர்த்தி வாழ்வாதாரத்தை சீரழிக்காதே’, ‘இரசாயன உரத்தை நிறுத்தி பசியைத் தேடாதே’ ‘உரத்தை தடுத்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே’, ‘உரமில்லா நாற்றும் டொலர் இல்லா நாடும் ஒன்றே’ போன்ற சுலோக அட்டைகளை தாங்கி நின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தடுக்காதே தடுக்காதே உரத்தை தடுக்காதே, அடிக்காதே அடிக்காதே விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே ஆகிய கோஷங்களை எழுப்பினர்.

## பிடுங்கி எறிந்தனர்

இரசாயன உரத் தட்டுப்பாடு காரணத்தால் விவசாயமும் தேயிலை தொழிற்றுறையில் பாதிப்படைந்துள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

தலவாக்கலை- லிந்துலை நகர சபையின் முன்னாள் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியில் நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான அசோகசேபால தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சேதன பசளையை பயன்படுத்தி விவசாயத்தை சரியாக முன்னெடுக்க முடியவில்லை. இரசாயன உரம் இன்மையால் விவசாயத்துறையும் தேயிலை தொழிற்றுறையும் பாதிப்படைந்துள்ளது எனத் தெரிவித்தனர். சேதனை பசளையை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட விவசாய நிலங்களுக்குச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், சேதன பசளையால் பாதிப்படைந்திருந்த மரக்கறிகளை பிடுங்க வீசியெறிந்து அழித்தனர்.

## பங்காளிக் கட்சிகளின்...

மின்சாரம், பெற்றோலியம் மற்றும் துறைமுக தொழிற்சங்கத் தலைவர்களுடன் அடுத்த சில நாட்களில் இடம்பெறும் சந்திப்பின் பின்னர், பங்காளிக் கட்சித் தலைவர்கள் அறிக்கையை வெளியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக பங்காளிக் கட்சியொன்றின் தலைவர் தெரிவித்தார்.

யுகதனவி மின்நிலையத்தின் பங்குகளை மாற்றுவதற்கான தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசாங்கத்தின் பத்து பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் அண்மையில் கடிதம் அனுப்பியபோதும் கலந்துரையாடலுக்கு ஜனாதிபதி மறுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

யுகதனவி மின் நிலையத்தில் பங்குகளை மாற்றுவது தொடர்பாக கட்சிகள் எழுப்பிய குற்றச்சாட்டுகள் உண்மை இல்லை என்று ஜனாதிபதி அனுப்பிய பதில் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் பிரச்சினைகள் குறித்து விவாதிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அல்லது கட்சியின் தேசிய அமைப்பாளர் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்திக்குமாறு ஜனாதிபதி கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

## ‘மாறுவதற்கு...

அத்துடன், தங்களுக்கு வேண்டிய கிருமி நாசினியை உடனடியாக வழங்குமாறும் இயற்கை விவசாயத்துக்கு மாறுவதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம் எனவும், அவர் கூறினார்.

வலிகாமம் கிழக்கு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில், புத்தூர் மற்றும் உரும்பிராய் கமநல சேவை நிலையங்களுக்கு முன்பாக, நேற்று (18) முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தாங்கள் எப்பொழுதுமே இரசாயன பொருள்களை விரும்புபவர்கள் அல்ல எனவும் தமது நிலங்கள் இரசாயன பசளைகளுக்கு இசைவாக்கம் பெற்றுள்ளன எனவும் உடனடியாக அசேதனப் பசளைக்கு ஒரே இரவில் மாறுவது என்பது விவசாயிகளால் முடியாத காரியம் எனவும் கூறினார்..

தெற்கிலே இப்படியான ஆர்ப்பாட்டத்தை உடனடியாக செய்ய முடியாத நிலையில், தாங்கள் வடக்கில் இவ்வாறான பாரிய ஆர்ப்பாட்டங்களை ஒவ்வொரு கிராம கமநல சேவை நிலையம் ஊடாக முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்த சுமந்திரன், தொடர்ச்சியாக இவ்வாறான கண்டன ஆர்ப்பாட்டங்களை தாங்கள் மாகாணம் வாயிலாக மேற்கொள்ள உள்ளோம் எனவும் கூறினார்.

‘இரசாயனம் எவ்வாறு எங்களுடைய உடலை சின்ன சின்னதாக அரித்து கொள்கின்றது என்று எங்களுக்கு தெரியும். அது மாற்றப்பட வேண்டும். ஆனால் ஒரே இரவிலே இதனை மாற்ற முடியாது. இது ஆட்சியாளருக்கும் தெரிந்த விடயம்’ என்றும், அவர் கூறினார்.

## மதகுருக்கள் இருவரால்...

அத்துடன், நியூ போட்ரஸ் நிறுவனத்துடனான திரவ எரிவாயு விநியோக ஒப்பந்தத்தை தடுக்க, இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறும் அந்த மனுவின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

வழக்கறிஞர் மஞ்சுள பாலசூரிய மூலம் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவை அமைச்சர்கள், அமைச்சரவை செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், நியூ போட்ரஸ் நிறுவனம், சட்டமா அதிபர் உட்பட 54 பேர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

யுகதனவி மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு மாற்றுவது, தங்களதும் நாட்டு மக்களதும் அடிப்படை உரிமைகளை மீறுவதாக மனுதார்கள் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த ஒப்பந்தம் தொடர்பாக, செப்டம்பர் 6 ஆம் திகதி அமைச்சரவையில் எட்டப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

## பொதுப் போக்குவரத்தை...

பொதுப் போக்குவரத்து சேவைகளை ஆரம்பிப்பது நோய் மீண்டும் கடுமையாகப் பரவுவதற்கு வழிவகுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இதேவேளை, குறைந்தபட்சம் டிசெம்பர் இறுதி வரை, சுற்றுலா உள்ளிட்ட பயணங்களைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன, நாட்டில் இன்னும் சுமூகமான சூழல் ஏற்படவில்லை என்றும், தினமும் 500 முதல் 600 வரை கொரோனா தொற்றாளர்கள் இன்னும் இனங்காணப்பட்டு வருகின்றனர் என்றார்.

“சுகாதார சட்டங்களை மீறும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள், வைரஸின் மறுபிறழ்வுக்கு வழிவகுக்கும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆசைப்பிள்ளை ஏற்றத்தில்...

பரிட்சார்த்த சேவையில் ஈடுபட்ட ரயில், யாழ்ப்பாணத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போது, கூட்டமாக தண்டவாளத்தில் பயணித்த மாடுகளை மோதியுள்ளது.

சம்பவத்தில் 10க்கும் மேற்பட்ட மாடுகள் உயிரிழந்துள்ளதுடன், இன்னும் சில மாடுகளுக்கு கடுங்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆசிரியர்கள் இல்லாத சூழல் உருவாகாது

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்ற போது, ஆசிரியர்கள் பாடசாலைகளில் இருக்காவிட்டால், மாணவர்களின் பாதுகாப்புக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்குமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நீண்ட நாட்களுக்குப் பின்னர் இந்த மாதம் 21ஆம் திகதி பாடசாலைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்படுகின்றன. கொரோனாவாலும் ஆசிரியர்கள் சம்பள பிரச்சினையாலும் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. ஆசிரியர்-அதிபர்களின் சம்பளம் போதுமானளவு இல்லை என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டோம். அதற்காக சம்பளம் அதிகரிக்க வேண்டுமென்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

இது 24 வருடங்கள் பழைமையான பிரச்சினை. ஆகவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க எமது அரசாங்கம் உரிய முயற்சிகளை எடுத்தது.முழு நாடும் பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினையை எதிர்கொண்டுள்ள நேரத்திலும் இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்க நாம் நடவடிக்கை எடுத்தோம்.

எனவே ஆசிரியர்களின் தொழில் சாதாரண தொழில் மாத்திரமல்ல. அது விசேட அடையாளத்தைக் கொண்டுள்ளது என்றார்.

இணையவழி கல்வித்திட்டம் சரியான தீர்வாகாது. அதனை முழுமையாக எமது நாட்டில் அமுல்படுத்த முடியாது. இணைய வசதியை பெறாத பல மாவட்டங்கள் உள்ளன. எனவே, வகுப்பறையில் ஆசிரியர்கள் நேரடியாக கற்பிப்பதை தவிர மாற்று வழியில்லை. ஆகவே விவாதங்களுக்கு இடமளிக்காமல் ஆசிரியர்கள் வராவிட்டால் மாணவர்களின் பாதுகாப்புக்கு என்ன என்ற கேள்வி பிரயோசனமான விவாதமாக அமையாது. எனவே இது மாணவர்களின் எதிர்காலம் . மாணவர்கள் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் உரித்துடையவர்கள் அதற்காக நாம் அனைவரும் முன்னிற்க வேண்டும் என்றார்.

## புதிய அரசியல் கூட்டணிக்கு...

இதுத் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மீள கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை கடந்த காலங்களில் இருந்து நாம் ஆரம்பித்துள்ளோம். கொரோனா வைரஸால் இப்பணிகள் தடைப்பட்டிருந்தாலும் அப்பணிகளை மீண்டும் நாம் ஆரம்பித்துள்ளோம் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய எதிர்பார்த்துள்ளோம். விரிவான அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்க வேண்டுமென எல்லா இடங்களிலும் தற்போது பேசப்படுகிறது. விரிவான அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்குவதற்கானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு 1,300 இக்கும் அதிகமான பிரதேச சபை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். மாகாணசபை உறுப்பினர்கள் 46 பேர் உள்ளனர். என்பதை நினைவில் கொள்ளவேண்டும் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்பது நாட்டிலுள்ள பெரிய கட்சியாகும். எனவே, அரசியல் கூட்டணி ஒன்றை அமைக்கும்போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சிறிய கட்சியை போல அல்லாது பெரிய கட்சியாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைமையிலேயே அரசியற் கூட்டணி ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படும் எனவும் அவர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

## மனம் கசந்த பங்காளிகளே...

திஸ்ஸமஹாராம பகுதியில் நேற்று (18) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு அழைத்தார்.

இந்த அரசாங்கம் வந்ததிலிருந்து மக்கள் பல தியாகங்களைச் செய்துள்ளனர் ஆனால் அதற்கு பதிலாக அரசாங்கம் இந்த மக்களுக்கு 40 வருடங்களுக்கு முன்னரான யுகத்தையே பரிசளித்துள்ளது என்றார்.

ஜனாதிபதி தொடக்கம் பிரதமர் வரை பிரதமரிலிருந்து அரசாங்கம் வரை, அரசாங்கத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை ஒட்டு மொத்த அரசாங்கமே தோல்வியடைந்துள்ளமை முன்பள்ளி சிறார்கள் கூட அறிவர் என்றார்.

மக்கள் பல துன்பங்களைத் தாங்கிக்கொண்டு எல்லயைற்ற தியாகங்களை இந்த அரசாங்கத்துக்காக செய்தனர் எனத் தெரிவித்த அவர், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிப்பெற்று பொதுத் தேர்தலிலும் வெற்றிப்பெற்ற பின்னர் அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்தை முன்னெடுக்க மக்கள் அரசாங்கத்துக்கு வாய்ப்பு வழங்கினார்கள் அவை அனைத்துக்கும் இன்று, அரசாங்கம் மக்களை நடாத்தும் விதமானது, விதியை கேலிக் கூத்தாக்க மாற்றியுள்ளது என்றார்.

இந்த அரசாங்கம் ஆட்சியமைத்த தினத்திலிருந்து எதிர்க்கட்சி என்ற ரீதியில் தான் கூறிய அனைத்தும் இன்று உண்மையாகியுள்ளன என்று தெரிவித்த சஜித் பிரேமதாஸ, தான் கூறியவற்றுக்கு அரசாங்கம் செவிமடுத்து இருந்திருந்தால் கொரோனாவால் ஆயிரக் கணக்கான உயிர்களை பலிகொடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

ஆசிரியர்- அதிபர்களின் பிரச்சினையை வெறுப்புடன் இந்த அரசாங்கம் பார்ப்பதாகத் தெரிவித்த அவர், இதனால் இந்த நாட்டின் 40 இலட்சத்துக்கு அதிகமான மாணவர்களின் எதிர்காலத்துடன் அரசாங்கம் விளையாடுவதாகவும் இது இந்த நாட்டின் ஆசிரியர்களின் தவறு இல்லை என்றார்.

## அச்சுறுத்தலால் உரும்பிராய் போராட்டம்...

இந்நிலையில், உரும்பிராய் கமநல சேவை நிலையத்துக்கு முன்பாக விவசாயிகள் மேற்கொள்ள இருந்த போராட்டத்தை, பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து நிறுத்தியுள்ளனர்.

அத்துடன், போராட்டத்துக்கு வந்திருந்தவர்களை இராணுவத்தினரும் கோப்பாய் பொலிஸாரும் அச்சுறுத்தியுள்ளனர். அச்சுறுத்தலுக்கு பயந்து விவசாயிகள் போராட்டத்தைக் கைவிட்டு சென்றுள்ளனர்.

சீருடை தரித்தவர்களின் அச்சுறுத்தல் காரணமாக, போராட்டத்தை மேற்கொள்ள முடியாமல் போனதாக, போராட்டத்துக்கு வந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.




## கருணை, நேர்மையின் அவசியத்தை உணர்த்தியவர் உத்தம நபி

அனைவரதும் நம்பிக்கைக்குரியவராக மாற வேண்டுமெனில், கருணை மற்றும் நேர்மை என்பன அவசியமென்று உலகுக்கு சுட்டிக்காட்டிய முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்தநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது,எந்தவொரு சமூகத்திலும் வாழ்கின்ற மனித குலத்தின் சிந்தனை மற்றும் நடத்தை என்பவற்றின் அடிப்படையாக அமைவது, அவர்கள் நம்பிக்கைக் கொண்டு ஏற்றுக்கொள்கின்ற ஆழமான மார்க்கமே ஆகும்.

இறைவன் நேர்மையுள்ள மனிதர்களுக்கு கருணை காட்டுவதோடு, அவ்வாறான மனிதர்களுக்குத் தகுதியான உயர் அந்தஸ்த்து வழங்கப்படுவதை, முஹம்மத் நபி அவர்களின் வாழ்க்கை மற்றும்



முன்மாதிரியான நடத்தை என்பவற்றை ஆழமாகக் கற்கும்போது விளங்கிக்கொள்ள முடிகிறது.

இலங்கை உட்பட உலகவாழ் அனைத்து முஸ்லிம்களினதும் கௌரவத்துக்குரிய முஹம்மத் நபி (ஸல்)அவர்களின் வழிகாட்டல்களை மேலும் சமூகமயப்படுத்தி ஒற்றுமையை உருவாக்குவதே முஸ்லிம்கள் நபி அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய விசேட கௌரவமாகும் என்று நான் நினைக்கின்றேன்.

அவர்களின் வாழ்வு முழுவதும் மனித நலனைக் கருத்திற்கொண்டு கடைப்பிடித்து வந்த குணாம்சங்களை, ஏனைய காலங்களை விடவும் தற்போதைய சூழ்நிலையிலேயே சமூக நலனை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்துவது பொருத்தமானதாக அமையும். இன்றும், உலக மக்களின் மரியாதைக்குரிய முஹம்மத் நபி (ஸல்)அவர்களின், வாழ்க்கை வழிகாட்டல்களை கௌரவத்துடன் பின்பற்றி வருகின்ற இலங்கை முஸ்லிம்கள் உட்பட உலகவாழ் முஸ்லிம்களின் வாழ்க்கையில் சுபீட்சமும் சௌபாக்கியமும் உருவாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். இவ்வாறு ஜனாதிபதி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பிறருக்கு முன்மாதிரியாக விளங்கியவர் முஹம்மது நபி

உலகம் முழுவதும் பரந்து வாழும் இஸ்லாமிய பக்தர்களின் தீர்க்கதரிசியான முஹம்மது நபி நாயகம் (ஸல்)அவர்களின் பிறந்த தினத்தைக் கொண்டாடும் அனைத்து இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுப்பியுள்ள மீலாதுன்நபி தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,மனிதநேயம் நிறைந்த, கண்ணியமான, மனித அன்பை கட்டியெழுப்புவதற்கு, தனது தனிப்பட்ட வாழ்க்கையின் மூலம் பிறருக்கு முன்மாதிரியாக விளங்கி, அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முஹம்மது நபி நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாமிய விழுமியங்களின் அமைப்பை நிறுவிய முன்னோடியாவார். பிறரின் நம்பிக்கையை வென்றெடுத்த மையால் அவர் அல் அமீன் என்று அறியப்பட்டார்.

முஹம்மது நபி நாயகம்(ஸல்) அவர்கள் அக்காலத்தில் காணப்பட்ட சமூகத்தின்



ஏற்றத்தாழ்வுகளை அறிவார்ந்த புரட்சியால் இல்லாதொழித்து சமத்துவத்திற்காக அயராது உழைத்த ஒரு அறிஞராவார்.

உலகில் தோன்றிய தீர்க்கதரிசிகள் மத்தியில், முஹம்மது நபி நாயகம்(ஸல்) அவர்களின் நோக்கமானது மனித சமுதாயத்தை நல்லொழுக்கம் மற்றும் அகிம்சையால் நிரப்புவதாகும்.

உலக வாழ் மக்கள் அனைவருக்கும் நல்வழி காட்டுவதே கடவுளின் தூதரான நபி நாயகத்தின் போதனையின் சாராம்சமாகும். அவ்வழி செல்லும் அனைத்து முஸ்லிம் மக்களும் சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப தங்கள் பங்களிப்பை உச்ச அளவில் வழங்க முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

கொரோனா தொற்றை எதிர்கொண்டு நாம் கடந்துச் செல்லும் இந்த கடுமையான காலத்தை வெற்றி கொள்வதற்கு நபி நாயகம் அவர்களின் வாழ்க்கையை முன்மாதிரியாக கொள்ளுமாறு முஸ்லிம் மக்களுக்கு நான் நினைவூட்டுகின்றேன்.

சமய வழிபாடுகளுக்கு முன்னுரிமை வழங்கி, ஏழை மக்களுக்கு உதவி செய்து நபி நாயகம் அவர்களின் பிறந்த தினத்தை அர்த்தமுள்ள வகையில் கொண்டாடும் இலங்கை மற்றும் உலக வாழ் அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் இனிய மீலாதுன் நபி திருநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

## சகிப்புத் தன்மைக்கு நபிகள் நாயகமே முன்மாதிரி

நெருக்கடியான கால கட்டங்களில் இறை நம்பிக்கையுடனும் சகிப்புத் தன்மையுடனும் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதற்கு நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) முன்மாதிரியாகத் திகழ்ந்ததாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள மீலாதுன் நபி செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இஸ்லாத்தின் இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) உலகெங்கிலும் வாழும் கோடிக்கணக்கான முஸ்லிம்களால் வாழ்வின் சகல துறைகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றார். இறை வேதமான அல் குர்ஆனுக்கு அடுத்ததாக முஸ்லிம்களின் மூலாதாரமாக நபிகளாரின் வழிமுறையே விளங்குகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, நாம் பல்வேறு சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றோம். மக்களின் இயல்பு வாழ்க்கை பல விதங்களிலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அல் குர்ஆனின் போதனைகளும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியுமே அனைத்து பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வாக அமையும் என்பதில் நாமனைவரும் உறுதியாக இருக்க வேண்டும்.

தீய சக்திகளால் நமது ஈமானிய சமுதாயத்தை நோக்கி விடுக்கப்படுக்கின்ற அச்சுறுத்தல்களை ஆன்மிக பலத்தைக் கொண்டு வெற்றிகரமாக முறியடித்து ஈருலகிலும் விமோசனம் பெற எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக என செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகத்தாருக்கு வழிகாட்டிய உத்தம நபி

நாட்டிலும் சமூகத்திலும் அமைதி, சுபீட்சம் ஏற்பட பிரார்த்திப்பதோடு நபிகளார் விட்டுச்சென்ற பணிகளை வாழ்வில் முழுமையாக பின்பற்றி நடக்க மீலாத் தினத்தில் அனைவரும் திடசங்கற்பம் பூணுவோமென பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் விடுத்துள்ள மீலாத் தின



வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

உயிரிலும் மேலான நபி (ஸல்) அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் பிறை 12 இல் இவ்வுலகில் அவதரித்தார். இவரின் வருகை இருளடைந்த முழு உலகையும் ஒளிவிளக்காக்கியது. அதேபோல் மனித மிருகங்களாக வாழ்ந்த அன்றைய ஜாஹிலிய்ய மக்களை மனித புனிதர்களாக மாற்றி உலகிலே நீதியை ஓங்கச்செய்த ஒரு சமூகத்தலைவராக நபி (ஸல்) அவர்கள் இன்று வரை அனைத்து இன மக்களாலும் மதிக்கப்படுகிறார். அன்றைய சமூகத்தில் இஸ்லாத்தின் தூதை அவர் முன்வைத்தபோது அவர் எதிர்கொண்ட துன்ப துயரங்களை சொல்லி முடிக்க முடியாது. இருந்தபோதிலும் பொறுமையையும் அமைதியையும் கடைபிடித்தார்கள். இறுதியில் இறைவன் வெற்றியை வழங்கினான். அந்தவகையில் உலகிலே பாரிய மாற்றத்தை உருவாக்கிய மனித ப்புனிதர். அல்குர்ஆனிய சமூகமொன்றை இவ்வுலகில் உருவாக்கி விட்டுச்சென்ற அண்ணலாரின் பணிகளை எமது வாழ்வில் கடைபிடித்து நடப்பதற்கு இன்றைய நந்நாளில் பிரார்த்திப்போம்.

## தேவையுடைய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

அகிலத்துக்கோர் அருட்கொடையாக வந்துதித்த நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளது. இச்செய்தியை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி மற்றும் பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் ஆகியோர் இணைந்து அனுப்பியுள்ளனர்

ரபீஉனில் அவ்வல் மாதம் இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான மாதமாகும். ஏனெனில், இந்த மாதத்தில் எம் உயிரிலும் மேலான இறுதி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பால் மனிதகுலம் ஆசீர்வதிக்கப்பட்டது.

‘ரபீஉன்’ என்றால் ‘வசந்தம்’ என்பது பொருள். வசந்த காலம் பூமிக்கு பசுமையையும்,



அழகையும் கொண்டு வருவது போல ‘வசந்தம்’ எனப் பொருள்படும். ‘ரபீஉனில் அவ்வல்’ மாதத்தில் பிறந்த உயிரிலும் மேலான அருமைத் தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனித சமூகத்துக்கு சுபீட்சம், வெற்றி, மகிழ்ச்சி, அமைதி மற்றும் மனநிறைவையும் கொண்டு வந்தார்கள்.

‘நாம் உம்மை அகிலத்தாருக்கு ஓர் அருட்கொடையாகவே அன்றி அனுப்பவில்லை.’ (அத்தியாயம்: அல்–அன்பியா, வசனம்: 107)

கொரோனா காரணமாக, பலர் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்ற இந்த நேரத்தில் தேவையுடைய மக்களுக்கு இன, மத பாகுபாடுகளின்றி உதவிக்கரம் நீட்டுமாறும் அனைவரையும் தயவாய் வேண்டிக் கொள்கின்றோம். சுபீட்சமான வாழ்வு பிறக்க பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறும் எல்லோரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

# தொற்றாளர் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு

நாட்டில் நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவதாகப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பயணக்கட்டுப்பாடுகள், சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களை பொதுமக்கள் மீறிவருவதால், நாளாந்தம் இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ்



தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நாடுமுழுவதிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், எழுமாறான பி.சி.ஆர், அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொண்டு, தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்புக்கான காரணத்தை கண்டறிந்து, அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு, மக்கள் ஒத்துழைப்பது மிகவும் அவசியம். கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதால் நோய் அறிகுறிகள் இல்லாத தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் நாட்டில் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படும். நாடு ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படும் ஆபத்துக் காணப்படுவதாகவும் பொதுச் சுகாதார பரிசோதர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதன்போது தெரிவித்தார்.

## சிறைச்சாலைகளில் செனிடைசர்களுக்கு தடை

கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறப் பயன்படுத்தும் செனிடைசரை (கைகளை கழுவுவதற்கு பயன்படும் தொற்றுநீக்கி திரவம்) சிறைச்சாலைகளில் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 ஈரான் கைதிகள் தொற்றுநீக்கி திரவத்தை (செனிடைசரை) அருந்தியதில் இருவர் உயிரிழந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது. இதனையடுத்து சிறைச்சாலைகளில் செனிடைசர்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிறைச்சாலைகளில் கைகளைக் கழுவுவதற்காக தொற்றுநீக்கிகள் இனி வழங்கப்படாது எனவும் அதற்குப் பதிலாக, சவர்க்காரங்களை வழங்க



தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தற்போதைய சூழ்நிலையில் கைதிகள் பார்வையாளர்களிடமிருந்து செனிடைசர்களை பெற அனுமதிக்கப்படுவதில்லை எனவும் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் வாரத்தில் ஒருதடவை சிறைச்சாலை வார்ட்களை சுத்தம் செய்வதற்காக, தொற்றுநீக்கி திரவத்தைப் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அதிகாரிகளின் தீவிர கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படும் எனவும் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

### எரிபொருள் கொள்வனவுக்கு

## இந்தியாவிடம் இலங்கை கடன் உதவி

எரிபொருளைக் கொள்முதல் செய்வதற்கு, இந்தியாவிடம் 3,750 கோடி ரூபாய் கடன் வழங்க வேண்டும் என, இலங்கை கோரியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா தொற்றால் இலங்கை பாதிக்கப்பட்டு, கடுமையான அன்னிய செலாவணி நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. இதனால் எரிபொருள் கொள்முதல் செய்வதில் சிக்கல் எழுந்துள்ளது. தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய், சிங்கப்பூரிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பொருட்களை இலங்கை இறக்குமதி செய்கிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக, இறக்குமதிக்கு கூடுதலாக செலவு செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. கொரோனா தொற்றால் நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கை அரசாங்கம், எரிபொருள் கொள்முதல் செய்ய பணம் இல்லாமல் இந்தியாவிடம் கடன்கேட்டுள்ளதாகவும் இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.



## விளக்கமறியல் நீடிப்பு

ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தரவுகள் அழிந்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட எபிக் லங்கா நிறுவனத்தின் உதவி பொறியியலாளர் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (11) ஆஜர்படுத்திய போதே, நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

## 219 கிலோகிராம் மஞ்சளுடன் இருவர் கைது

மன்னாரில் சட்டவிரோதமாக 219 கிலோகிராம் மஞ்சளை ஏற்றிச்சென்ற இருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.



மன்னார், குச்சிகுளத்தில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியை கடக்க முயற்சித்த மிட்சுபிஷி வகை லொறி ஒன்றைச் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது குறித்த லொறியில் சட்டவிரோதமாக ஏற்றிச் செல்லப்பட்ட மஞ்சளுடன் இருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட மஞ்சளின் பெறுமதி 1.3 மில்லியன் ரூபாய் எனத் தெரிவிக்கும் இராணுவத்தினர், கைது செய்யப்பட்ட இருவரையும் லொறியையும் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

## பசளைப் பிரச்சினை; சோறு சாப்பிடுவோரின் பிரச்சினை

இனத்தின் விடுதலைக்காய் போராடிய இனத்தை, இன்று பசளைக்காகவும் போராடும் நிலைக்கு இந்த அரசாங்கமும் அதனுடன் இணைந்துள்ளவர்களும் சேர்ந்து தள்ளியுள்ளார்கள். இது விவசாயிகளின் பிரச்சினை மாத்திரமல்ல; சோறு சாப்பிடும் அனைவரினதும் பிரச்சினை எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வெல்லாவெளியில் திங்கட்கிழமை (18) நடைபெற்ற விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வு கோரிய போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், கடலில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், இன்று தரை வழிப் போராட்டமாக மாறியிருக்கின்றது.

எங்களது இனத்தின் விடுதலைக்காகப் போராடிய இனம், இன்று வாழ்வாதாரத்துக்காகப்



போராடும் நிலைமைக்கு, இந்த அரசாங்கம் தள்ளிருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பருத்தித்துறை வரை, கடல் வழியாக எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகளை அமைச்சரும், அரசாங்கமும் கவனத்தில் எடுக்காத காரணத்தால், கடல்வழிப் போராட்டம் நடத்தப்பட்டது. இது வடக்கு கிழக்கிலே, அந்தந்த இடங்களிலும் நடைபெற்றது.

போராட்டம் என்பது அறிந்து வருவது. அதற்கு எவரையும் அழைக்க வேண்டிய அவசியமில்லை. இது மக்களுக்காக, விவசாயிகளுக்காகச் செய்யும் போராட்டம். ஆனாலும். நாங்கள் மண்வெட்டியை வைத்திருப்பது தான் விமர்சனப் பொருளாக இருக்கும் என்றார்.

## மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழப்பு

எம்பிலிப்பிட்டிய, கொலொன்ன, பிட்டவெல பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் என எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

26 வயதான இளைஞரும் மற்றுமொரு சிறுமியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸர் தெரிவித்தனர்.

மேலும், இதுவரை உயிரிழந்த இளைஞரின் அடையாளம் உறுதி செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் பிரதேச மக்களிடம் சடலத்தை அடையாளம் காணுமாறும் கேட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம், மக்களுக்கு

# பொருத்தமாக இல்லை

## மாற்று கொள்கையை அமல்படுத்த கோரிக்கை

நூருல் ஹுதா உமர்



“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனம், மக்களுக்குப் பொருத்தமானதாக இல்லை. எனவே, மாற்றுக் கொள்கையை அமல்படுத்த முன்வரவேண்டும்” என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில், நாவிதன்வெளி, சவளக்கடை பிரதேசத்தில் நேற்று (18) நடைபெற்ற விவசாயிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கொண்டுகொண்டு, கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “அரசாங்கம், விவசாயிகளின் விருப்பு வெறுப்புகளை ஓரம் தள்ளிவிட்டு, இந்தத் துறையில் பாண்டித்தியம் பெற்ற அதிகாரிகளின் ஆலோசனைகளையெல்லாம் கவனத்தில்கொள்ளாது செயற்படுகிறது.

“இயற்கை பசளைகளை வழங்கி, விவசாயத்தை மேம்படுத்த வேண்டும் என்ற தனது கொள்கைப் பிரகடனத்தில், ஜனாதிபதி உறுதி கொண்டுள்ளார். இந்த விடயமானது, விவசாயத்தை முற்றுமுழுதாக நாசமாக்கும் விடயமாகப் பார்க்கிறோம்.

“மொத்த தேசிய உற்பத்தியில் 22 சதவீத பங்களிப்பைச் செய்யும் எங்களின் பிரதேசத்தில், சேதனை பசளை மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கும். கடந்த காலங்களில், எமது பிரதேச விவசாயிகள், பல்வேறு சிக்கல்களைச் சந்தித்தார்கள். பல்வேறு நஷ்டங்களை அடைந்திருந்தாலும், சிறப்பாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சுபீட்சத்தின் நோக்குத் திட்டத்தை முன்மொழிந்து, மக்களை வறுமையின்பால் இந்த அரசாங்கம் கொண்டு செல்கின்றது என்றார்.

திருகோணமலையிலும்

# விவசாயிகள் முற்றுகை

## போக்குவரத்து ஸ்தம்பிதம்

எப்.முபாரக்





தங்களின் விவசாய செயற்பாடுகளுக்காக, அரசாங்கம் விரைவில் இரசாயன உரத்தைப் பெற்றுத்தறுமாறு கோரி, திருகோணமலை, சேருநுவர பிரதேச விவசாயிகள், நேற்று (18) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

சேருவிலவிலுள்ள அனைத்து விவசாயிகளும் விவசாய சங்கங்களும் ஒன்றிணைந்து, சேருநுவர சந்தியில் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியில் போக்குவரத்தும் தடைப்பட்டது.

500க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்துகொண்டு, விவசாயம் மேற்கொள்ளத் தேவையான உரத்தைப் பெற்றுத்தருமாறும் விவசாயிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, வீதியை மறித்து, கொடும்பாவிகளை ஏரித்து, விவசாயிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டமையால் சிறிது பதட்டமான நிலைமை ஏற்பட்டிருந்தது.



# உரம் வேண்டி...

‘உரம் இன்றி உழவு இல்லை’ எனும் தொனிப்பொருளில், மட்டக்களப்பு, ஆயித்தியமலை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு முன்னால், நேற்று (18) முன்னெடுக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தைப் படங்களில் காணலாம்.
இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறிநேசன், பா. அரியேந்திரன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் உட்பட 20 விவசாய அமைப்புகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.

(படங்கள்: கனகராசா சரவணன்)



# மீலாதுந் நபி தின அன்னதானம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹிவ ஸல்லம் அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, மீலாதுந் நபி தினக் கொண்டாட்டம் நடைபெறுகிறது.

இதனையொட்டி, காத்தான்குடி அப்துல் ஜவாத் அலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் கீழுள்ள மன்பஉல் ஹைறாத் பள்ளிவாசலில், நபி புகழ் கூறும் மௌலூது வைபவம் நடைபெற்றதுடன், நேற்று (18) காலை அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்த வைபவம், காத்தான்குடி அப்துல் ஜவாத் அலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் தலைவர் மௌலவி ஏ.ஜே.அப்துர் ரஊப் மிஸ்பாஹியின் வழிகாட்டலில், சுகாதார நடைமுறைகளுடன் நடைபெற்றது.

அன்னதானம் வழங்கும் நிகழ்வில், மண்முனைப் பற்று பிரதேச சபை தவிசாளர் டி. தயானந்தனும் கலந்துகொண்டதுடன், பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சுகாதாரத்தைப் பின்பற்றாத

# கடைகளுக்குப் பூட்டு

எம்.எஸ்.எம்.ஹனீபா



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள், விற்பனை நிலையங்கள் போன்றவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன், நேற்று (18) தெரிவித்தார்.

உணவகங்களில் பணியாற்றுபவர்கள் முகக்கவசம், கையுறை ஆகியவற்றை அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொத்துவில், அக்கரைப்பற்று, சம்மாந்துறை, கல்முனை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் குழுவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாதவும், இதன்போது உணவகங்கள், வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், உணவு பரிமாறுவோர் ஆகியோருக்கு சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் கூறினார்.

**“ உணவு சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராகவும் பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் உரிமையாளருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, மூடப்படும்**

உணவு பாதுகாப்புச் சட்டதிட்டங்களை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதோடு, பாவனைக்குதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் கண்டுபிக்கப்பட்டால், அதன் உரிமையாளருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்நிலையங்கள் மூடப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆங்கில ஆசிரியர் வெற்றிட

# ஆள்சேர்ப்பு பரீட்சை

எப்.முபாரக்

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கான இலங்கை ஆசிரியர் சேவை தரம் III-I தரத்துக்கு மாவட்ட ரீதியாக உயர் தேசிய டிப்ளோமாதாரர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையின் உளர்ச்சார்பு பாடத்தின் பரீட்சை, எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக, பரீட்சை காலவரையரையன்றி பிற்போடப்பட்டது. தற்போது இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பரீட்சை அனுமதி அட்டைகள், 27ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவில்லையாயின், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் 026-2220092 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமக்களின் எதிர்ப்பால்

# காணி அளவீடு பணி இடைநிறுத்தம்

நடராசா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி, கிளாலி கிராமத்தில் கடற்படைக்கு வழங்குவதற்கென காணி அளவீடு செய்யச் சென்ற நில அளவைத் திணைக்களத்தின் அதிகாரிகள், பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து, காணி அளவீடு செய்யாமல் திரும்பிச் சென்றுள்ளனர்.

கிளாலி கிராமத்தில், கடற்படைக்கென 05 ஏக்கர் காணி வழங்குவதற்கு, நில அளவைத் திணைக்களம் அளவீடுகளைச் செய்வதற்கு. நேற்று (18) காலை, கிளாலி கிராமத்துக்குச் சென்றனர்.

தகவல் அறிந்து ஒன்றுகூடிய அப்பகுதி மக்கள், நில அளவை முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நில அளவைத் திணைக்கள அதிகாரிகளை திருப்பி அனுப்பியுள்ளனர்.

பொதுமக்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப தவிசாளர் கஜன், உறுப்பினர் வீரபாகுதேவர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



விபத்தில்

# 16 வயது சிறுவன் பலி

க. அகரன்

வவுனியா, உலுக்குளம் பகுதியில், நேற்று முன்தினம் (17) மாலை இடம்பெற்ற விபத்தில், 16 வயதான சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உலுக்குளம் பகுதியைச் சேர்ந்த ஹன்சா டில்சான் மிகிரிங்க (வயது 16) என்ற சிரசுமன ம. வி. நவோத்தயா பாடசாலையில் கல்வி கற்ற மாணவனே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த சிறுவன், உலுக்குளம் பகுதியில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, அந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி, வீதியால் பயணித்துக்கொண்டிருந்த பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக உலுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவில்

# இளைஞனின் சடலம் மீட்பு

செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, முள்ளியவளை, தண்ணீரூற்று கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, 19 வயது இளைஞனின் சடலம், நேற்று முன்தினம் (17) மீட்கப்பட்டுள்ளது.

பாணுகாந் என்ற இளைஞனே, தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாள்நகரில்

# வெடிபொருட்கள் மீட்பு



மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, அம்பாள்நகர் பகுதியில், தனியார் ஒருவரின் காணியில் இருந்து, நேற்று முன்தினம் (17), ஒருதொகை வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணியைச் சுத்தம் செய்யும் போதே, இந்த வெடிபொருட்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது.

இதையடுத்து, நீதிமன்ற உத்தரவுக்கமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின் போது, பெருந்தொகையான வெடிப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.



செங்குந்தா பொதுச்சந்தை

# மரக்கறி வியாபாரிகள் கடையடைப்பு போராட்டம்

என்.ராஜ்

யாழ்ப்பாண மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கல்வியங்காடு, செங்குந்தா பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகள், நேற்று (18), கடையடைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

செங்குந்தா சந்தைக்கு அண்மையான பகுதிகளில் உள்ள வீதிகளில், மரக்கறி வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால், சந்தையில் வியாபாரம் நடைபெறுவது இல்லை எனவும் தெரிவித்தே, செங்குந்தா பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகள், கதவடைப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாநகர சபை, நல்லூர் பிரதேச சபையினரிடம் சந்தைக்கு அண்மையில், வீதிகளில் வியாபாரத்தில் ஈடுபடுவோரை தடுத்து நிறுத்துமாறு, கோரிக்கை விடுத்த போதிலும், நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே, வியாபாரிகள் கடையடைப்பில் ஈடுபட்டுள்ளதாக, பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோவில்மோட்டை விவசாய காணி:

# மன்னாரில் மக்கள் போராட்டம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மடு திருத்தலத்துக்குரிய கோவில்மோட்டை விவசாய காணி அபகரிப்பு செய்யப்பட்டு வருகின்றமையை கண்டித்து, பெரிய பண்டிவிரிச்சான், சின்னப் பண்டிவிரிச்சான் கிராம மக்கள் இணைந்து, மன்னார் - பஜார் பகுதியில், நேற்று (18), அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நீண்ட காலமாக, மடு திருத்தலத்துக்குச் சொந்தமாகக் காணப்பட்ட குறித்த காணியை, சிலரின் தூண்டுதலுக்கு அமைவாக அபகரித்து வருவதாக, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பஜார் பகுதியில் இருந்து மாவட்டச் செயலகம் வரை ஊர்வலமாகச் சென்று, மன்னார் மாவட்டச் செயலாளரை சந்தித்து, மகஜர் கையளித்தனர்.







# ஒட்டையான பாலம்

■ துவாரகஷான்

அக்கரபத்தனை பிரதேச சபைக்குட்பட்ட டொரிங்டன் தோட்டத்தினூடாக மோர்சன், அயோனா, அலுப்புவத்தை ஆகிய தோட்டங்களுக்குச் செல்லும் பிரதான பாதையில், அயோனா தோட்ட மார்க்கத்தில் 100 வருடங்கள் பழைமை வாய்ந்த பாலம் உடைந்து காணப்படுவதால், இப்பகுதியில் வாழும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

இதன் காரணமாக, அயோன தோட்டத்தைச் சுற்றி இரண்டு கிலோமீட்டர் தூரம் வாகனங்கள் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்களை குறித்த நேரத்திற்கு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

இப்பகுதியில் உள்ள தோட்டங்களில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான பொருள்கள், கனரக வாகனங்களில் பாலத்தின் ஊடாக ஏற்றிச் சென்றதன் காரணமாகவே, இப்பாலம் பழுதடைந்ததாக இப்பிரதேச மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, உரிய அதிகாரிகள் இப்பிரதேச மக்களின் நலன் கருதி, குறித்த பாலத்தினை புனரமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மத்திய, சப்ரகமுவ மாகாணங்களில்

# 1,175 பாடசாலைகள் திறக்கப்படுகின்றன

■ சேஹ்ன் செனவிரத்ன, அஜித்லால் சாந்தஉதய

சப்ரகமுவ மாகாண கல்வி திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் 200 மாணவர்களுக்குக் குறைந்த 625 பாடசாலைகளை, இந்த மாதம் 21ஆம் திகதியிலிருந்து திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளைத் திறப்பது தொடர்பில், மாகாண கல்வி திணைக்கள அதிகாரிகள், சுகாதார அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற பின்னரே, குறித்த பாடசாலைகளைத் திறக்க தீர்மானிக்கப்பட்டது என்றார்.

கொரோனா தொற்று காரணமாக, கடந்தாண்டு 122 நாள்கள் மாத்திரமே பாடசாலைகள் திறக்கப்பட்டதுடன், இந்த வருடம் இதுவரை 56 நாள்களே பாடசாலைகள் திறக்கப்பட்டன என்றார்.

எனவே, மாணவர்கள் தொடர்பில் சிந்தித்து பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு, ஆசிரியர், அதிபர்களிடம் கோரிக்கை விடுப்பதாகவும் அதிபர், ஆசிரியர்களின் கோரிக்கைக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியாயமான தீர்வை எடுப்பார் என்றும் தெரிவித்தார்.



இதேவேளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களில் 200 மாணவர்களுக்குக் குறைந்த 805 பாடசாலைகள் காணப்படுகின்றன. இதில் 550 பாடசாலைகளின் அதிபர்கள் 21ஆம் திகதி கடமைகளுக்கு சமூகமளிக்க இணக்கம் தெரிவித்துள்ளதாக மத்திய மாகாண கல்வி பணிப்பாளர் அமரசிறி பியதாச தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மத்திய மாகாணத்தின் 13 வலயங்களுக்குரிய 550 பாடசாலைகளை, இந்த மாதம் 21ஆம் திகதி திறக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறித்த பாடசாலைகளில் அதிபரின் மேற்பார்வையின் கீழ், சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவித்த அவர், இதற்காக பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்குவர் என்றார்.

பாடசாலைகள் திறக்கப்பட்ட சில நாள்களுக்கு, கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்காமல், மாணவர்களின் உளநல மட்டத்தை ஆராய்ந்த பின்னர், கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான வேலைத்திட்டங்களும் திட்டமிடப்பட்டுள்ளன என்றார்.

கடமைகளுக்குத் திரும்புவதாக இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்காத அதிபர்களில் குறிப்பிடத்தக்களவு அதிபர்கள் கடமைகளுக்கு திரும்புவர் எனத் தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் மொழி பயில வந்த

# இராணுவ மேஜர் திடீர் மரணம்

■ சுமணசிறி குணதிலக

பயிற்சிக்காக வருகை தந்த இராணுவ மேஜர், வெல்லவாய இராணுவ முகாமில், திடீரென உயிரிழந்துள்ளார்.

அவரது அறையிலேயே நேற்று முன்தினம் (17) மாலை உயிரிழந்துள்ளார் என வெல்லவாய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர், 53ஆவது படையணியின் 6ஆவது பாபல ரெஜிமென்ட்டின் மிஹிந்தலை முகாமில் கடமையாற்றிய 49 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் குழுவொன்று, 2 மாதங்களுக்கு முன்னர், தமிழ் மொழி மூலப் பயிற்சிக்காக, வெல்லவாய-வருணகம இராணுவ முகாமுக்கு வருகை தந்துள்ளனர்.

16ஆம் திகதி இரவு நித்திரைக்குச் சென்ற மேஜர், நேற்று முன்தினம் மாலை வரை அறையிலிருந்து வெளியே வராமையால், அவர் தங்கியிருந்த அறையைத் திறந்து பார்த்தபோது, கட்டிலுக்கு அருகில் விழுந்திருந்த நிலையில் உயிரிழந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன், மரண விசாரணைகள் நேற்று (18) வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையில் இடம்பெற்றன என, வெல்லவாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தளையில்

# குவிந்த சுற்றுலாப் பயணிகள்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை தொடர்ந்து அமலில் இருக்கும் நிலையில், மாத்தளை-நக்கிள்ஸ் சுற்றுலா வலயத்துக்கு கடந்த சில தினங்களாக பெருமளவிலான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தனர்.

நக்கிள்ஸ் சுற்றுலா வலயம் உள்ளிட்ட பிட்டவல மேட்டுநிலம், சேர எல்ல, பம்பரகிரி எல்ல உள்ளிட்ட இடங்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகளைக் காணக் கூடியவாறு இருந்தது.


வார இறுதியான நேற்று முன்தினம் (17) மாகாண எல்லைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையாக்கப்பட்டிருந்த நிலையிலேயே, அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன், இவற்றில் அதிகமான வாகனங்கள், மத்திய மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களாகும்.

இவ்வாறு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் சிலர் முகக் கவசம் அணியாமல், சுகாதார வழிகாட்டல்களை முறையாக பின்பற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



## விஜயதசமி பூஜை நிகழ்வுகள்

தலவாக்கலை, இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் இராமன் தலைமையில், நவராத்தியையொட்டி, விஜய தசமி பூஜை நிகழ்வுகள் நடைபெற்றன. (கேதீஸ்)





“ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது

# ஒரு மாயை”

## சோ. ஸ்ரீதரன் தெரிவிப்பு

■ துவாரகஷான்

ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பு என்பது, ஒரு மாயையாக மாறியுள்ளது. அத்தோடு, தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகள் போல வாழ வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அநீதிகளுக்கு எதிராக, தமிழ் முற்போக்கு கூட்டணியால் தலவாக்கலையில் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் பெற்றுக் கொடுத்து விட்டோம் என்று மார்தட்டியவர்கள், இன்று தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலையைக் கண்டு மௌனித்துப் போயுள்ளார்கள். ஆயிரம் ரூபாய் சம்பளத்தைத் தொடர்ந்து, தோட்டங்களில் ஆயிரம் பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

தோட்ட நிர்வாகங்களால், தொழிலாளர்களை அடிமைப்படுத்தும் நிலைமைகள் அதிகரித்துள்ளன. தோட்ட அதிகாரிகளால் பெண் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றார்.

பாலத்தைப் பார்க்கச் சென்று

# தடக்கி விழுந்தார் டிலான் எம்.பி

## கைகொடுத்தார் சாமிக எம்.பி

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை, ஹாலிஎல, ரஜமாவத்தையில் வெள்ளையர்களால் நிர்மாணிக்கப்பட்ட பாலத்தைக் கண்காணிக்கச் சென்ற பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெர்ணான்டோ, குறித்த பாலத்தில் தவறி விழுந்துள்ளார்.

113 அடி நீளமான குறித்த பாலம், பயணிக்க முடியாதளவு பழுதடைந்து உள்ளதால், இதனூடாகப் பயணிக்கும் ஹாலிஎல, ஊவாபரணம விவசாயிகள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்துள்ளனர்.

குறித்த பாலத்தை திருத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் (17) இடம்பெற்ற போது, அதனை கண்காணிப்பதற்காக, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கு வருகை தந்துள்ளார்.



இதன்போது, பிரதேசவாசிகளின் கோரிக்கைக்கமைய, பாலத்தில் நடந்த டிலான் எம்.பி, இவ்வாறு தவறி விழுந்துள்ளார்.

அப்போது, அருகிலிருந்த மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் சாமிக புத்ததாச உள்ளிட்டவர்கள், டிலானை காப்பாற்றியுள்ளனர்.

இந்த நிலையில், “கீழே விழுந்து, இந்தப் பாலத்தின் நிலைமையை, நான் நன்றாகப் புரிந்துக்கொண்டதால், விரைவில் இதனை புனரமைக்க நடவடிக்கை எடுப்பேன்” எனத் தெரிவித்துள்ளார்.

கிளங்கன் வைத்தியசாலையின் அபிவிருத்தி பணிகளை

# கண்காணித்தார் இராஜாங்க அமைச்சர் ஜீவன்

■ டி.சந்ரு

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சினூடாக 2 கோடியே 26 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் மூலம், மீள் நிர்மாணம் செய்யப்பட்டு இயங்கி வரும், கிளங்கன் வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அபிவிருத்தி பணிகளை, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் கண்காணித்தார்.

கிளங்கன் வைத்தியசாலையில் நிலவிவரும் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, குறைப்பாடுகள் குறித்து கடந்த காலங்களில் பல்வேறு விமர்சனங்கள் எழுப்பப்பட்டன.

இந்த நிலையில், இது குறித்து இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டது.

கிளங்கன் வைத்தியசாலையின் குறைப்பாடுகள், முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி பணிகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளுடன் பல முக்கியஸ்தர்களும் வைத்தியசாலைக்கு விசேட விஜயத்தினை மேற்கொண்டு நிலைமைகளைக் கண்டறிந்தனர்.

இவ்வாறு கண்டறியப்பட்ட அபிவிருத்தி குறைப்பாடுகள் தொடர்பில், விசேட அக்கறை செலுத்திய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், வைத்தியசாலையின் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி, அபிவிருத்திக்கான தேவைப்பாடுகளை கேட்டறிந்து, அதற்கேற்ப நடவடிக்கைகளையும் அபிவிருத்திக்கான நிதி உதவிகளையும் ஒதுக்கி, பணிகளை விரைவுப்படுத்த அதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.

# சிறுமியின் அந்தரங்க உறுப்பில் கீறிய சிறுவன் கைது

■ ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அல்கரனோயா தோட்டத்தில் (16) வயதுடைய சிறுவனை இராகலை பொலிஸார் நேற்று முன்தினம் (17) இரவு கைது செய்துள்ளனர்.

அல்கரனோயா தோட்டத்தில் வசிக்கும் இச்சிறுவன், தனது பக்கத்து வீட்டில் வசித்துவரும் ஐந்து வயதுடைய சிறுமியின் அந்தரங்க உறுப்பை, நகரங்களால் கீறிக் காயப்படுத்தியுள்ளார்.

இதுதொடர்பில், தன்னுடைய பெற்றோருக்கு தெரிவிக்கவே, சிறுமியின் பெற்றோர் இராகலை பொலிஸில் முறையிட்டுள்ளனர். அதன்பின்னர், பொலிஸாரின் உதவியுடன் அச்சிறுமி, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதன்பின்னர் சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளார். அவ்வாறு கைது செய்யப்பட்ட சிறுவனிடம் விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், அச்சிறுவனை வலப்பனை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பொறுத்ததே பொறுத்தோம்; சில மாதங்களுக்குப் பொறுத்துக்கொள்வோம்

வாழ்க்கையில் ஒவ்வொரு படிகளையும் கடப்பதற்கு, எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது என்பது, ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட அனுபவம், அறிவு, விவேகம் சார்ந்ததாகும். சிலர், வாழ்க்கையில் எவ்விதமான கஷ்டங்களையும் அனுபவிக்காது, திடீரென உயர்ந்திருப்பர்.

இன்னும் சிலர், பொறுமையால் காலந்தாழ்த்தி உயர்ந்திருப்பர், பொறுமையைக் கடைப்பிடிப்போரின் அனுபவங்கள், அவமானங்கள், கஷ்டங்கள் என்பனவற்றுக்கெல்லாம் அளவே இருக்காது. அவ்வாறனவர்கள், தலையை அசைத்தும் அசைக்காமலும், வாயைத் திறக்காமலும் இருந்து, ஒவ்வொரு படிகளாக முன்னேறிச் சென்றிருப்பர்.

ஒவ்வொரு படிகளாகத் தாண்டிச் செல்லாது, குறுக்குவழிகளால் உயர்நிலைக்கு தூக்கிவைக்கப்பட்டவர்கள், கசப்பான பாடங்களைக் கற்றிருக்கமாட்டார்கள் என்பது மட்டுமே உண்மையாகும்.

ஆனால், முழு உலகத்தையும் முடக்கத்துக்குள் தள்ளி, கொரோனா வைரஸ் கற்றுக்கொடுத்துவிட்டது. அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக, ஒவ்வொரு நாடும் தலையைத் தூக்கிக்கொண்டிருக்கின்றது. முடக்கம், தனிமைப்படுத்தல், ஊரடங்குச் சட்டம் என்பன தளர்த்தப்பட்டு, மக்கள் இயங்கத் தொடங்கிவிட்டனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர், முழுமையான தளர்வுக்கு வாய்ப்புகள் உள்ளனவென அறியமுடிந்தாலும், எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையிலும், பயணக்கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து அமலில் வைத்திருப்பதே சிறந்ததென, பொதுச் சுகாதார பிரிவினரும், சுகாதாரத் தரப்பினரும் வலியுறுத்தி உள்ளனர்.

கொரோனா மரணங்களும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கையும் குறைந்தாலும், முழுமையான பிரதிபலன்களை அடையவேண்டுமாயின், டிசெம்பர் மாதம் வரையிலும் இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என, அவ்விரு தரப்பினரும் வலியுறுத்தியுள்ளனர்.

ஏற்கெனவே, குறிப்பிட்டதன் பிரகாரம், சுகாதார வழிமுறைகளைக் கடுமையாக மக்கள் கடைப்பிடிக்கவேண்டும். இல்லையேல், வைரஸின் மறுபிறழ்வுக்கு வழிசமைத்துவிடும். வீடுகளுக்குள்ளேயே பொறுமையாக இருந்துவிட்டோம்; இன்னும் சில நாள்களுக்கு, அந்தப் பொறுமையைத் தொடர்வதே உசிதமானது.

கொரோனா வைரஸ் தொற்றால், சகலரும் ஏதோவொரு வகையில் பாதிக்கப்பட்டிருப்பார்கள். இதில், மாணவர்களின் பாடு பெரும்பாடாக இருக்கிறது. அடுத்தடுத்த வகுப்புகளுக்கு, எவ்வாறு தரமுயர்த்தப்பட்டோம் என்பதெல்லாம், பலருக்கும் தெரியாது. இன்னும் சிலருக்கு, நிகழ்நிலையின் (ஒன்லைன்) ஊடாகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

ஏமாற்ற நினைத்தவர்கள், ஏமாற்றி இருப்பார்கள்; நீதி, நியாயத்துடன் தங்களைத் தாங்களாகவே சுரண்டிப் பார்க்க நினைத்த மாணவர்களும் தங்களுடைய பிள்ளைகள், குறுக்குவழியில் சென்றுவிடக்கூடாதென நினைத்த பெற்றோர்களும், பிள்ளைகளுக்குச் சரியாக வழிகாட்டி, பரீட்சைக்குத் தோற்றச் செய்திருப்பர்.

'வயிற்றை வாயைக் கட்டி' மட்டுமன்றி, இன்னோரன்ன பொறுமையைக் கடைப்பிடித்த எமக்கு, இன்னும் சில மாதங்களுக்குப் பொறுமையாக இருக்கமுடியும். அந்தத் தைரியத்தை மனத்தில் வரவழைத்துக் கொண்டால், கொரோனா வைரஸை முழுமையாகத் துடைத்தெறியலாம். அதுவே, நிம்மதியான வாழ்வுக்கு வழிசமைக்கும் என்பதை நினைவூட்டுகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சக்கைபோடு போடும் 'விலை அரசியல்'

**மொஹமட் பாதுஷா**

நாடொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் நகர்வுகளின் தன்மையைப் பொறுத்து, அதற்கான விலையை மக்கள் செலுத்த வேண்டி ஏற்படலாம். அதுபோல, பொருட்களின் விலை ஏற்றஇறக்கங்கள் மீதான ஓர் அரசியலும் உள்ளது. இலங்கை மக்களுக்கு, இவ்விரண்டு விடயங்களிலும் நிறையவே அனுபவங்கள் உள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி முடிவுக்கு வருவதற்கிடையில், நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இச்சூழலில், அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன், பல பொருட்களின் விலைகள், உத்தியோகபூர்வமாகவும் உத்தியோகபூர்வமற்ற முறையிலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இயலாமையின் காரணமாகவோ அல்லது, நடப்பதைப் பார்த்துக் கொள்ளாலாம் என்ற அசட்டு துணிச்சலின் அடிப்படையிலோ, அரசாங்கம் விலையேற்றத்துக்கு இடமளித்திருக்கின்றது.

மக்களுக்கும் அவர்களது வாழ்க்கைச் சுமைக்கும், முன்னுரிமை வழங்காத இந்த 'எகத்தாளமான' விலை அதிகரிப்பு, மக்களுக்கு கடந்த பல வருடங்களில் இல்லாத வாழ்வாதார நெருக்கடியையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரே நாளில், எரிவாயுவின் விலை 1,250 ரூபாயால், (78 சதவீதம்) அதிகரிக்கப்பட்டதுடன் சீமெந்து, கோதுமை மா ஆகியவற்றின் விலைகளும் உயர்த்தப்பட்டன. அதற்கு அடுத்த சில நாள்களுக்குள், பால்மாவின் விலையும் அதிகரிக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் பால்மாக்களுக்கே விலை அதிகரிப்பு அவசியம் என, முன்னர் கூறப்பட்டாலும், அதன் பின்னர், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மாவின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், இன்னும் தட்டுப்பாடு நீங்கியபாடில்லை.

கோதுமை மா, எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்பட்ட மறுகணமே, பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. அல்லது, அதன் நியமநிறைகள் குறைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

இப்போது, எரிபொருட்களின் விலைகளையும் அதிகரிக்குமாறு, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கோரி வருகின்றன. ஆனால், "எரிபொருள் விலையை அதிகரிக்க எதிர்பார்க்கவில்லை" என்று, அரசாங்கம் கூறுகின்றது. இதைப் பார்க்கின்ற போது, இன்னும் சில தினங்களுக்குள், எரிபொருள் விலைகளும் அதிகரிக்கப்படலாம் என்றே, கடந்தகாலச் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

ஏனெனில், தினசரி பாவனைப் பொருட்களுக்கு, சில்லறைச் சந்தையில் கடுமையான தட்டுப்பாடு நிலவிய போது, கொழும்பில் இருந்து கொண்டு, "தட்டுப்பாடு எதுவும் இல்லை" எனக் கூறி, அமைச்சர்கள் 'வாயால் வடை' சுட்டனர்.

பின்னர், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படப் போகின்றது என அனுமானங்கள் வெளியாகியிருந்த வேளையில், "இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை; மக்கள் அச்சப்படத் தேவையில்லை" என்று, அரசாங்கம் கூறியது. இவ்வாறு, சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. எனவே, எரிபொருள் உள்ளடங்கலாக, எந்தப் பொருளின் விலையும் அதிகரிக்காது என்று, அறுதியிட்டுச் சொல்ல முடியாது என்பதே யதார்த்தமாகும்.

சாதாரண மக்களைப் பற்றிய உளப்பூர்வமான சிந்தனையுடன், முறையான திட்டமிடல் ஊடாக, விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாத அரசியலும் அரசியலை ஆட்டுவிக்கும் விலைசார் தீர்மானங்களும், நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் மீதும் சுமையை அதிகரிக்கச் செய்துள்ளன.

நாம் உண்மையில் கோதுமை, சீனி, பால்மா, எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்புகள் பற்றித்தான், கவனம் செலுத்துகின்றோம். ஆனால், விலை அதிகரிப்புப் பற்றி, பெரிதாக நாம் அலட்டிக் கொள்ளாததும், அடிக்கடி கொள்வனவு செய்யும் (எப்.எம்.சி.ஜி) பொருட்களான சவர்க்காரம், பற்பசை, தேயிலைத்தூள் போன்ற ஏகப்பட்ட பொருட்களின் விலைகள், சம்பந்தப்பட்ட கம்பனிகளால் இரகசியமாக, அடிக்கடி அதிகரிக்கப்படுகின்றன என்பது வேறுகதை!

போகின்ற போக்கைப் பார்த்தால், பொருட்களின் விலை அதிகரிப்பு, எங்கே போய் முடியப் போகின்றது என்று எவருக்கும் தெரியாது. எத்தனை பொருட்களுக்கு, இன்னும் விலை அதிகரிக்கப் போகின்றது என்பதும் அனுமானங்களுக்கு அப்பாற்பட்டது.

நாடு முடக்கப்பட்டிருந்த காலத்தில், பால்மா உள்ளிட்ட பல பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அவசியமான பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக, ஆட்சியாளர்கள் கூறினர். ஆனால், நிறுவனங்கள் அவற்றை விநியோகிக்கவில்லை. சில சில்லறைக்கடை வியாபாரிகள், கொள்ளை இலாபத்துக்காகப் பதுக்கினார்கள்; பின்னர் விலை உயர்த்தப்பட்டது.

ஆகவே, பொருட்களுக்குத் திறந்த சந்தையில், செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, கறுப்புச் சந்தையில் விலை உயர்வை உண்டுபண்ணுவதன் மூலம், 'என்ன விலைக்காவது பொருள் கிடைத்தால் போதும்' என்ற மனநிலையை, மக்களிடையே உருவாக்கும், சூட்சுமமான உத்தி பயன்படுத்தப்படுகின்றதா என்ற சந்தேகமும், எழாமல் இல்லை.

இங்கு, மிக உன்னிப்பாக அவதானிக்க வேண்டிய விடயம், அரசாங்கத்தின் அசட்டுத் துணிச்சலாகும். அதாவது, 'என்ன நடந்தாலும் பரவாயில்லை' என்ற எண்ணத்திலும் மக்களைச் சமாளிக்கலாம் அல்லது, பொருட்படுத்தத் தேவையில்லை என்ற தைரியத்திலும், விலை அதிகரிப்புக்கு அனுமதி அளித்துள்ளமையாகும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்பில், சிறுபான்மை மக்களும் சிங்கள மக்களும் எப்போதும் கரிசனை காட்டுகின்றனர். பொது விலை மட்டமும் பொருட்களின் கிடைப்பனவும், இலங்கை அரசியலில் அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடியன என்பதற்கு, கடந்த காலத்தில் பல அனுபவங்கள் உள்ளன.

சிறிமாவோவின் ஆட்சிக்காலத்தை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடுவார்கள். மூடிய பொருளாரதாரக் கொள்கையில் வெற்றி பெறுவதற்காக, பொருட்களின் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டமையும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியும், அந்த ஆட்சி மீது மக்கள் வெறுப்படைய, முக்கிய காரணங்களாக அமைந்தன.

இந்தப் பின்னணியில், கடந்த நான்கு தாசப்தங்களாக ஆட்சிக்கு வந்தவர்கள் குறிப்பாக, பெரும்பான்மை மக்களைக் கவர்வதற்கான கருவியாக, பொருட்களின் விலைகளைப் பயன்படுத்தினர்.

தேர்தல் காலத்தில், "நாட்டை அபிவிருத்தி செய்வோம்" போன்ற வாக்குறுதிகளை விட, அரசி, பருப்பு, சீனி, நெத்தலி, எரிபொருள் போன்றவற்றின் விலைக் குறைப்புக்கான பரப்புரைகள், அதிக செல்வாக்குச் செலுத்தின. அது ஓரளவுக்கு, வெற்றியையும் கொடுத்தது.

ஆனால், இதையும் தாண்டி, இத்தனை பொருட்களின் விலைகளை அதிகரிக்க, இன்று இடமளித்ததன் மூலம், மக்களின் அதிருப்தியை அரசாங்கம் சம்பாதித்துக் கொண்டுள்ளமை, சற்று ஆச்சரியமானதுதான். இதனை இரண்டு கோணங்களில் நோக்க முடியும்.

ஒன்று, விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான மாற்று உபாயங்ளையும் அரசியல் தீர்மானங்களையும் எடுக்க முடியாத ஓர் இயலாமைக்குள், அரசாங்கம் மாட்டிக் கொண்டிருக்கிறது.

இரண்டாவது, 'இப்போதிருக்கின்ற நிலைமையில், என்னதான் விலை அதிகரிப்பை மேற்கொண்டாலும், மக்கள் ஒன்றும் நினைக்க மாட்டார்கள்; அவர்களைச் சமாளிப்பதற்கான வியூகத்தை, தேர்தல் வரும்போது சிந்திக்கலாம்' என்று, அரசாங்கம் நினைத்திருக்க வேண்டும்.

எது எப்படியிருப்பினும், இம்முறை மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற விலை அதிகரிப்பு என்பது, ஏற்றுக் கொள்ள முடியாததும், 'மரத்தால் விழுந்த மக்களை, ஏறிமிதிக்கும் மாட்டை'ப் போன்றதாகும்.

ராஜபக்ஷர்களின் அரசாங்கம் பற்றிய, அபரிமிதமான எதிர்பார்ப்புகளுடன்தான், 69 இலட்சம் மக்கள் அவர்களுக்கு வாக்களித்தனர். 'தேசிய பாதுகாப்பு' போன்ற வழக்கமான விடயங்களுக்கு மேலதிகமாக, பெரும் அபிவிருத்தித் திட்டங்கள், விலைக் குறைப்புகள், மக்களுக்கான நிவாரணங்கள் எனக் கூறியே, ராஜபக்ஷர்களும் மக்கள் ஆணையைக் கோரி நின்றனர். ராஜபக்ஷர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையும், பெரும்பான்மையின மக்களுக்கு இருந்தது.

பாராளுமன்றம், ஜனாதிபதி ஆகிய தேர்தல்களில், பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரும் கூட, அரசியலமைப்பில் 20ஆவது திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலம், அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டாலேயே, நாட்டைச் சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியும் என்று, ஆளும் கட்சி கூறியது.

அதைத் தொடர்ந்து, "பசில் ராஜபக்ஷ அமைச்சராக உள்வந்தால், இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்" என்று, ஆளுந்தரப்பினர் கூறினர். அதன்படியே, இவையெல்லாம் கனகச்சிதமாக நடந்தேறின.

ஆனால், கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி உட்பட, வேறெந்தப் பிரச்சினையும் நாட்டில் தீர்ந்த மாதிரித் தெரியவில்லை. மாறாக, பிரச்சினைகளும் மக்கள் மீதான சுமைகளும், 'தலைக்கு மேல் வெள்ளம் போல' பாய்கின்றன.

ஸ்திரமான அரசியல், பொருளாதார நிலையை ஏற்படுத்துவதில் வல்லவர்களாக, முன்னைய ஆட்சிக்காலங்களில் ராஜபக்ஷர்கள் திகழ்ந்தார்கள். ஆனால், இந்த ஆட்சியில், சர்வதேச அழுத்தங்களுக்குப் புறம்பாக, உள்ளக கட்சி முரண்பாடுகளையும் பொருளாதார சவால்களையும் சிக்கல்களையும் ஒருசேர எதிர்கொண்டுள்ளனர்.

இது சகஜமானதுதான். ஆனால், இவற்றை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கு, காத்திரமான திட்டங்கள் வகுக்கப்படவில்லை என்பதே, பரவலாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகள் ஆகும்.

'தலையிடிக்கு தலையணையை மாற்றுவது போல', சுகாதார நெருக்கடி காலத்தில், சுகாதார அமைச்சர் மாற்றப்பட்டார். அவ்வாறே, மத்திய வங்கி ஆளுநரும் இப்போது மாற்றப்பட்டுள்ளார்.

ஆனால், பொருட்களின் விலை அதிகரிப்பாலும், பணத் தாள்கள் அச்சிடப்படுவதாலும், பொது விலை மட்டமும் பணவீக்கமும் உள்நாட்டுக்குள்ளேயே அதிகரிக்க இடமளிக்கப்பட்டு இருக்கின்றதே தவிர, ஆறுதலான முன்னேற்றங்கள் எவற்றையும் காணக்கிடைக்கவில்லை; இந்நிலை மாற வேண்டும்.

இவ்வாறிருக்க, தமது போக்குகள் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற விடயத்தை, தற்போது அரசாங்க மேலிடங்கள், சற்று உணரத் தலைப்பட்டிருப்பதாக ஒரு தகவல் கசிந்துள்ளது. அது உண்மையாக இருந்தால், அதனை அரசாங்கம் செயலில் வெளிக்காட்ட வேண்டும்.

'மக்களுக்காகவே ஆட்சி; ஆட்சிக்காக மக்களல்ல' என்ற அடிப்படைத் தத்துவத்தை, தேர்தல் காலத்தில் மட்டுமல்ல, ஆட்சிக் காலத்திலும் புரிந்து செயற்பட்டால், நல்லது நடக்க வாய்ப்பிருக்கின்றது.



## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சில் எவ்வித கவலைகளையும் புகுத்தாமல் வாழ்பவர்கள், நிர்மலமான மகிழ்ச்சிக்குள் திளைத்திருப்பார்கள்.

முதியோருக்கு வயது முதிரமுதிர, குழந்தைகள் போல நடந்துகொள்ள ஆரம்பிப்பார்கள். பழைய நினைவுகள் மறந்துபோனால், மனம் எதையும் சிந்திக்காது. எனவே, வயசாளிகள் சின்னப்பிள்ளைகள் போல மாறிவிடுவதுண்டு.

பேரன், பேத்திகளுடன் செல்லச் சண்டை போடுவது, அவர்களுடன் தர்க்கம் செய்து, சிரிப்பதைக் கண்டிருக்கிறோம்.

முதியோர் எல்லோரும், இவ்வாறு நடந்துகொள்வதில்லை. துன்பங்களுடனும் நோய்களுடனும் வாழ்பவர்களும் இருக்கிறார்கள். தேகாரோக்கியத்துடன் வாழ்ந்தால், மனதில் இளமை உணர்வுடன் திகழமுடியும்.

ஆனால், குடும்பங்களில் குழப்பம், வறுமை, பிள்ளைகள் பெற்றோரைக் கண்டுகொள்ளாமை போன்ற காரணங்களால், முதியோரைக் கவலைகள் சூழ்ந்துகொள்கின்றன.

எனவே, முதியோரை அன்புடன் பேண வேண்டும். தங்களை ஆளாக்கியவர்களை மறக்கலாமா? முதுமை யாவருக்குமானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### முல்லைத்தீவு மக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்து நெருக்கடி

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமங்களுக்கான பஸ் சேவைகள் நடத்துவது தொடர்பாக, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும், பஸ் சேவைகள் இடம்பெறவில்லை என, பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவில் ஒதியமலை, ஆறுமுகத்தான்குளம், அம்பகாமம்; மாந்தை கிழக்கின் பல கிராமங்கள்; துணுக்காயின் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைக்கட்டியகுளம், அமதிபுரம் ஆகிய கிராமங்களுக்கு, "பஸ் சேவைகள் நடத்துவோம்" என, கூட்டங்களை நடத்திய அரசியல்வாதிகளாலும் அதிகாரிகளாலும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு, பத்தாண்டுகள் கடந்த நிலையிலும், பஸ் சேவைகள் இடம் பெறவில்லை.

இதன் காரணமாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் பல கிராமங்களில் வாழும் மக்கள், வைத்தியசாலைகள், பிரதேச செயலகங்கள் உட்பட பல்வேறு இடங்களுக்குச் சென்று வருவதில், போக்குவரத்து நெருக்கடி காரணமாக, இன்னல்களையும் அவலங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

கரைதுறைபற்று பிரதேச செயலாளர் பிரிவில், அம்பலவன்பொக்கணை, மாத்தளன், வலைஞர்மடம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்குச் செல்வதில், பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதுடன், முல்லைத்தீவு நகரத்தில் உள்ள மாவட்டச் செயலகத்துக்குச் செல்வதற்குக் கூட, போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் இவ்வாறான போக்குவரத்து நெருக்கடிகளுக்கு, மாவட்டச் செயலகம் விரைவான தீர்வுகளை வழங்க வேண்டும் என்பதே, மக்களின் கோரிக்கையாகும்.

–நடராசா கிருஸ்ணகுமார்

# பிக்பாஸ் வீட்டுக்குள் பிரியா?



பிக்பாஸ் நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். இதுவரை தமிழில் நான்கு சீசன்கள் முடிந்துள்ளன. தற்போது 5ஆவது சீசன் நடைபெற்று வருகிறது.

18 போட்டியாளர்களுடன் தொடங்கிய 'பிக்பாஸ் 5' நிகழ்ச்சியில், நமீதா மாரிமுத்து மற்றும் நதியா சங் வெளியேறியதால் தற்போது 16 போட்டியாளர்கள் மட்டுமே உள்ளனர்.

இந்த நிலையில், இந்த வாரத்தில் நடிகை பிரியா பவானி சங்கர் பிக்பாஸ் வீட்டுக்குச் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரியா பவானி சங்கர் நடித்துள்ள 'ஓ மணப்பெண்ணே' திரைப்படம் எதிர்வரும் 22ஆம் திகதி நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. அந்தத் திரைப்படத்தின் ப்ரமோஷனுக்காக அங்கு செல்ல உள்ளதாக கூறப்படுகிறது.

அவருடன் நடிகர் ஹரீஷ் கல்யாணும் செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதுடன், நடிகர் ஹரீஷ் கல்யாண், பிக்பாஸ் நிகழ்ச்சியின் முதல் சீசனில் போட்டியாளராக கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பேரறிவாளன் மருத்துவமனையில் அனுமதி

வேலூர்



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், ஆயுள் தண்டனை பெற்றுள்ள பேரறிவாளன், ஜோலார்பேட்டையில் உள்ள வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்.

பேரறிவாளன், சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக, பேரறிவாளனை பரோலில் விடுவிக்க வேண்டும் என்று, பேரறிவாளனின் தாயார் அற்புதம் அம்மாள் தமிழக அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்தார்.

இதனை ஏற்று, கடந்த மே மாதம் பேரறிவாளன் பரோலில் விடுவிக்கப்பட்டார். இதையடுத்து, பேரறிவாளன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், நேற்று (19) வேலூர் அரச மருத்துவமனையில், பேரறிவாளனுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில், சிடி ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் எடுக்கப்பட்டன.

கம்பம்



## சபரிமலை செல்லும் பக்தர்கள்
# திருப்பி அனுப்பிவைப்பு

கேரளாவில் கனமழை பெய்வதால், சபரிமலை செல்லும் பக்தர்களை, தேனி மாவட்ட பொலிஸார், திருப்பி அனுப்பியுள்ளனர்.

கேரளாவில் கடந்த 16ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது. வெள்ளம் ஏற்பட்டு, 19 பேர் புதையுண்டும் ஒன்பது பேர் மரணித்தும் உள்ளனர்.

இதனால், தமிழகத்தில் இருந்து சபரிமலை செல்லும் பக்தர்களையும் ஏலத் தோட்டங்களுக்கு வேலைக்கு செல்லும் தொழிலாளர்களையும் கம்பமெட்டு, குமுளி பகுதியில் தேனி மாவட்ட பொலிஸார் தடுத்து, திருப்பி அனுப்புகின்றனர்.

எர்ணாகுளம் செல்லும் கனரக வாகனங்களையும் அனுமதிக்கவில்லை. தொடர்ந்தும் மழை பெய்தவருவதால் கவனமாகச் செயற்படுமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஸ்ரீநகர்

## பயங்கரவாதிகளின் தாக்குதலால்
# புலம்பெயர் தொழிலாளர்கள் வெளியேற்றம்



ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதிகளின் தாக்குதலால், அங்குள்ள புலம்பெயர் தொழிலாளர்கள், தங்களின் சொந்த ஊர்களுக்குத் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீரில் கடந்த சில வாரங்களாக, தொடர்ச்சியாக பயங்கரவாதிகளின் தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதில், இராணுவ அதிகாரிகள், வீரர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என, பலரும் பலியாகியுள்ளனர். குறிப்பாக, வெளிமாநிலத்தவர்கள் காஷ்மீருக்குள் வர அஞ்ச வேண்டும் என்பதற்காக, ஜம்மு - காஷ்மீரில் தங்கியிருந்து பணியாற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் மீது, பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதனால் அச்சமடைந்துள்ள புலம்பெயர் தொழிலாளர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்கு, குடும்பங்களுடன் புறப்படுகின்றார்கள்.

புலம்பெயர் தொழிலாளர் ஒருவர் கூறுகையில், "ஜம்மு - காஷ்மீரின் சூழல் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. இங்கு குடும்பத்துடன் தங்கியிருந்து, எங்களால் பணியாற்றவோ நிம்மதியாக வாழவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் நாங்கள் எங்கள் சொந்த ஊர்களுக்கே திரும்புகிறோம்" என்றனர்.

# படப்பிடிப்புக்கு பறந்த சிம்பு



சிம்பு நடிப்பில், கௌதம் மேனன் இயக்கத்தில் உருவாகி வரும் 'வெந்து தணிந்தது காடு' என்ற திரைப்படத்தின் இரண்டு கட்ட படப்பிடிப்புகள் முடிவடைந்துள்ளன.

இந்த நிலையில், அடுத்த கட்டப் படப்பிடிப்புக்காக மும்பை செல்வதாக சிம்பு விமானத்தில் செல்லும்போது எடுத்த புகைப்படம் ஒன்றை, தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார். இந்தப் புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது.

மும்பையில் சில நாள்கள், இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு நடைபெறும் என்றும் அதன் பின்னர் அடுத்த கட்டப் படப்பிடிப்புக்காக படக்குழுவினர் சென்னை வர உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே இந்தத் திரைப்படத்தின் 'பர்ஸ்ட் லுக் போஸ்டர்' மிகப்பெரிய அளவில் வைரலானது. இசைப்புயல் ஏ.ஆர் ரஹ்மான் இசையில் உருவாகிவரும் 'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# விண்வெளியில் படக்குழு சாதனை

ஹொலிவுட்டில் விண்வெளியை மையமாக வைத்து 'கிராவிட்டி', 'இன்டர்ஸ்டெல்லர்' போன்ற பல திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. முதன் முறையாக விண்வெளிக்கே சென்று, ஒரு திரைப்படத்தை எடுத்திருக்கிறார்கள் ரஷ்ய படக்குழுவினர்.

கிலிம் ஷிபென்கோ இயக்கும் இந்தத் திரைப்படத்தின் கதைப்படி, ஆய்வுக்காக விண்வெளிக்குச் செல்லும் ஆராய்ச்சியாளர்களில் ஒருவருக்கு இதயப் பிரச்சினை ஏற்பட்டு விடுகிறது.

அவரை காப்பாற்ற பூமியிலிருந்து ஒரு மருத்துவர் செல்கிறார். அங்கு அவர் எதிர்கொள்ளும் சவால்கள் தான் திரைப்படத்தின் கதை. திரைப்படத்துக்கு 'தி சேலஞ்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

படப்பிடிப்புக்காக நடிகை யுலியா பெரெசில்ட், இயக்குநர் கிளிம் ஷிப்பென்கோ, அவர்களின் உதவிக்காக விண்வெளி வீரர் அன்டன் ஷகாப்லெரோவ் ஆகியோர் ஒக்டோபர் ஐந்தாம் திகதி கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் நகரில் இருந்து 'சோயுஸ் எம்.எஸ்-19' விண்கலத்தில், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திட்டமிட்டபடி 12 நாள்களில் விண்வெளியில் படப்பிடிப்பை நடத்தி முடித்த திரைப்படக்குழு, நேற்று முன்தினம் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர். இதன் மூலம் விண்வெளியில் திரைப்படம் எடுத்த உலகின் முதல் நாடாக ரஷ்யா வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கலபுரகி

# காட்டுக்குள் திக்குமுக்காடிய இருபெண்கள்




விறகு சேகரிக்க, காட்டுக்குச் சென்ற இரண்டு பெண்கள், வழி தவறியதால் இரவு முழுவதும் காட்டில் தவித்தனர்.

ருஸ்தும்புரா கிராமத்தில் வசிக்கும் இரண்டு பெண்கள், சனிக்கிழமை (16) காலை, விறகு சேகரிக்க, காட்டுக்கு சென்றனர். விறகு சேகரிக்கும் போது, கன மழை பெய்யத் தொடங்கியதால், மரத்தின் கீழ் அமர்ந்தனர். நீண்ட நேரமாகியும் மழை நிற்காததால், மழையில் நனைந்து கொண்டே வீட்டுக்கு திரும்ப முற்பட்டனர்.

இருளில் வழி சரியாகத் தெரியாமல், ருஸ்தம்புராவுக்கு செல்வதற்கு பதில், கனகபுராவை நோக்கிச் சென்று மலை மீது ஏறிவிட்டனர். ஊருக்கு செல்ல வழி தெரியாமல், முன்னோக்கியும் செல்ல முடியாமல், பின்னுக்கும் செல்ல முடியாமல், காட்டிலேயே சுற்றினர். மரத்தடியில் இரவைக் கழித்தனர்.இதற்கிடையில், விறகு சேகரிக்கச் சென்ற பெண்கள் வீடு திரும்பாததால் பீதியடைந்த குடும்பத்தினரும் கிராமத்தினரும் காட்டுக்கு சென்று தேடியும் கிடைக்காததால், கிராமத்தில் பதற்றம் ஏற்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை பொழுது விடிந்ததும், பெண்கள் இருவரும் வழியைக் கண்டுபிடித்து, விறகுக் கட்டுடன் வீடு திரும்பினர். குடும்பத்தினரும் கிராமத்தினரும் நிம்மதியடைந்தனர்.

கோட்டயம்



# வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட வீடு

கேரளாவில் கடந்த சில தினங்களாகக் கனமழை பெய்து வருகிறது. இதனால், வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவுகளால் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில், கோட்டயம் மாவட்டம், முண்டகாயம் பகுதியில் உள்ள ஆற்றங்கரையோரம் உள்ள ஒரு வீடு, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ள நிலையில், மேலும் பலரைக் காணவில்லையென மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை, நீர்நிலைகள் நிரம்பி, உபரி நீர் ஆறுகளில் திறந்து விடப்பட்டுள்ளது. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் கரையோரப் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஆற்றங்கரையோர பகுதிகள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

# வெப் தொடரில் த்ரிஷா



கொரோனா தொற்றால் சினிமா துறை முடங்கிபோயுள்ள நிலையில், ஓ.டி.டி தளங்களில் வெளியாகும் வெப் தொடர்களுக்கு மவுசு கூடி உள்ளது.

இந்தத் தொடர்கள், திரைப்படங்களைப்போல் காதல், ஆக்ஷன், மர்மம், பிரம்மாண்டம் என்று இரசிகர்களை ஈர்க்கும் வகையில் இருப்பதாக பாராட்டுகள் கிடைத்துள்ளன.

இதில் நடிக்கும் நடிகர், நடிகைகளுக்கு சினிமாவை விட அதிக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதனால் நடிகைகள் பார்வை, வெப் தொடர்கள் பக்கம் திரும்பி உள்ளது.

ஏற்கெனவே மீனா, காஜல் அகர்வால், நித்யா மேனன், ரம்யா கிருஷ்ணன், சமந்தா உள்ளிட்ட பல முன்னணி நடிகைகள், வெப் தொடர்களில் நடித்துள்ளனர்.

இந்த நிலையில், நடிகை த்ரிஷாவும் வெப் தொடரில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார். அவர் நடிக்கும் முதல் வெப் தொடருக்கு 'பிருந்தா' என பெயரிடப்பட்டு உள்ளது.

தெலுங்கில் தயாராகும் இந்த வெப் தொடரை தமிழ், கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் 'டப்பிங்' செய்து வெளியிட உள்ளனர். சூர்யா வங்கலா இயக்கும் இந்த வெப் தொடரில் நடிகை த்ரிஷா துப்பறியும் பொலிஸ் அதிகாரியாக நடிப்பதாக கூறப்படுகிறது.

# ஹொலிவூட்டுக்கு செல்லும் வில்லன்



தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, கன்னடம் என பல்வேறு மொழி திரைப்படங்களில் வில்லன் மற்றும் குணசித்திர வேடங்களில் நடித்து, முன்னணி நடிகராக வலம் வருபவர் பிரகாஷ்ராஜ்.

தற்போது இவர் கைவசம் சிவா இயக்கத்தில் ரஜினி நடிப்பில் உருவாகும் 'அண்ணாத்த' உள்ளிட்ட பல திரைப்படங்கள் உள்ளன. இதுதவிர தெலுங்கிலும் முன்னணி நடிகர்களின் திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

இவ்வாறு பிசியான நடிகராக வலம் வரும் பிரகாஷ் ராஜ், விரைவில் ஹொலிவூட் திரைப்படம் ஒன்றில் நடிக்க உள்ளாராம். அண்மைய பேட்டி மூலம், இதனை உறுதி செய்துள்ளார்.

ஏற்கெனவே தமிழ் திரையுலகை சேர்ந்த தனுஷ், நெப்போலியன், ஜிவி பிரகாஷ் ஆகியோர் ஹொலிவுட் திரைப்படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி

## மகனும் தந்தையும் இணைந்து
# தாயின் முகத்தில் தலையணையை அழுத்தி கொலை



திருநெல்வேலி மாவட்டம், ஜமீன் சிங்கம்பட்டியைச் சேர்ந்த கணவனும் (48 வயது), மனைவியும் (47 வயது) தமது மகனுக்கும் மனைவியின் அண்ணன் மகளுக்கும், அண்மையில் திருமணம் செய்துவைத்தனர்.

பெற்றோர் மற்றும் மாமியார் ஏற்பாட்டில், கல்லூரியில் படிப்பை தொடர்ந்தார் மருமகள். கணவர் வீட்டுக்கு வரவில்லை. இதனால், மாமியார் வீட்டில் பிரச்சினை ஏற்பட்டது. மகனும் தந்தையும் சேர்ந்து தாயைத் தாக்கி, தலையணையை முகத்தில் அழுத்திக் கொலை செய்தனர். பின்னர், அவர் கீழே தவறி விழுந்து இறந்ததாக பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தனர்.

பொலிஸார் விசாரணையில், இருவரும் கொலை செய்ததை ஒப்புக் கொண்டனர். பொலிஸார், இருவரையும் கைது செய்தனர்.



இருபதுக்கு – 20 உலகக் கிண்ணத் தொடர்:

# பங்களாதேஷை வீழ்த்திய ஸ்கொட்லாந்து

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஓமானின் அல் அம்ரட்டில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பங்களாதேஷுடனான குழு பி போட்டியில் ஸ்கொட்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

ஸ்கொட்லாந்து: 140/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிறிஸ் கிறீவ்ஸ் 45 (28), ஜோர்ஜ் மன்சி 29 (23), மார்க் வட் 22 (17) ஓட்டங்கள். பந்துவீச்சு: மஹெடி ஹஸன் 3/19 [4], ஷகிப் அல் ஹஸன் 2/17 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 2/32 [4], மொஹமட் சைபுடீன் 1/30 [4], தஸ்கின் அஹ்மட் 1/28 [3])

பங்களாதேஷ்: 134/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: முஸ்தபிசூர் ரஹீம் 38 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரட் வேல் 3/24 [4], கிறிஸ் கிறீவ்ஸ் 2/19 [3], மார்க் வட் 1/19 [4], ஜொஷ் டேவி 1/24 [4])

போட்டியின் நாயகன்: கிறிஸ் கிறீவ்ஸ்

இதேவேளை மற்றைய போட்டியில் பப்புவா நியூ கினியை ஓமான் வென்றிருந்தது.

இந்நிலையில், இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பப்புவா நியூ கினியை ஸ்கொட்லாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஓமானை பங்களாதேஷ் எதிர்கொள்ளவுள்ளது.

## காலமானார்



இலங்கை கிரிக்கெட் டெஸ்ட் அணியின் முதலாவது தலைவரான பந்துல வர்ணபுர நேற்று (18) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 68 ஆகும்.

சிறிதுகாலம் சுகவீனம் அடைந்திருந்த அவர், தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையிலேயே அவர் மரணமடைந்துள்ளார்.

1975 ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணியில் இணைந்து கொண்ட அவர், 1982ஆம் ஆண்டு வரையிலும் விளையாடியுள்ளார்.



## மலிங்கவின் சாதனையை முறியடித்த ஷகிப்

இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கையணியின் முன்னாள் அணித்தலைவர் லசித் மலிங்கவின் சாதனையை பங்களாதேஷின் முன்னாள் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன் முறியடித்துள்ளார்.

ஸ்கொட்லாந்துடன் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போட்டியிலேயே இச்சாதனையை ஷகிப் ஏற்படுத்தியிருந்தார்.

84 போட்டிகளில் 107 விக்கெட்டுகளை மலிங்க வீழ்த்தியிருந்த நிலையில், தற்போது 89 போட்டிகளில் 108 விக்கெட்டுகளை ஷகிப் வீழ்த்தியுள்ளார்.




## இந்தியாவை வென்ற இலங்கை

■ நடராஜா மலர்வேந்தன்

இலங்கை, இந்திய இராணுவ அணிகளுக்கிடையிலான நட்பு ரீதியிலான கரப்பந்தாட்டப் போட்டியில் 3 - 0 என நேர் செட்களில் இலங்கை வென்றது.

பனாங்கொடயில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் ஆரம்பம் முதல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை, இந்தியாவுக்கு சவாலாக திகழ்ந்தனர்.

குறிப்பாக, இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்திய மலையகத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் (கலை), சிறந்த விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தி, இலங்கை இராணுவ அணியின் வெற்றிக்கு உந்துசக்தியாக விளங்கியதோடு போட்டியின் சிறந்த வீரராகவும் தெரிவு செய்யப்பட்டார்.



இவர், ஊவா மாகாண பதுளை வெவெஸ்ஸ தமிழ் வித்தியாலயம், சரஸ்வதி தேசிய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் வெவெஸ்ஸ தோட்ட விவேகானந்தா கரப்பந்தாட்ட அணியின் தலைவரும் சிரேஷ்ட வீரரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது கரப்பந்தாட்ட வெற்றிப் பயணம் இனிதே தொடரவேண்டுமென, பாடசாலை சமூகமும் மலையக இளைஞர்களும் விளையாட்டு ஆர்வலர்களும் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றனர்.



இத்தாலிய சீரி ஏ தொடர்:


## றோமாவை வென்ற ஜுவென்டஸ்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற றோமாவுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் வென்றது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை மொய்ஸே கீன் பெற்றிருந்தார்.

எரித்திரியா

## 2 திருமணங்கள் செய்யாத ஆண்களுக்குச் சிறை



ஆண்கள் கட்டாயமாக இரண்டு திருமணங்கள் செய்து கொள்ள வேண்டும் என்ற விநோத சட்டமானது, ஆபிரிக்க நாடான எரித்திரியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.


எரித்திரியாவில் நீண்ட காலமாக உள்நாட்டுப் போர்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் விளைவாக அந்நாட்டில் ஆண்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதோடு பெண்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வடைந்துள்ளது.

இதனால் பெண்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, ஆண்கள் கட்டாயம் இரண்டு திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

மேலும், அவ்வாறு திருமணம் செய்ய மறுக்கும் ஆண்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படுமெனவும், அத்துடன் முதல் மனைவி அவரது கணவரின் 2ஆவது திருமணத்திற்கு ஆட்சேபனை தெரிவித்தால் இருவரும் சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், எரித்திரியன் அரசாங்கத்தின் இந்த முடிவு உலகம் முழுவதும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சீனா



## தனி விண்வெளி நிலையம் அமைக்கும் சீனா

அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் பங்களிப்பின் பேரில் கட்டமைக்கப்பட்ட சர்வதேச விண்வெளி நிலையம், விண்ணிலிருந்து ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. எனினும், இதன் ஆயுட்காலம் சில ஆண்டுகளில் முடிவடைய உள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில், சீனா தனக்கென ஓர் விண்வெளி நிலையமொன்றை அமைத்துக் கொள்ள முடிவெடுத்துள்ளது.

அதன்படி, ஏற்கெனவே 3 விண்வெளி வீரர்களை சீனா, விண்ணுக்கு அனுப்பி வைத்த நிலையில் அவர்கள் தங்களது பணிகளை முடித்துக் கொண்டு பூமிக்கு திரும்பியுள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக, ஒரு பெண் உட்பட மூன்று விண்வெளி வீரர்களை நேற்று முன்தினம் (17) சீனா விண்வெளிக்கு அனுப்பி வைத்துள்ளது.

சீனா, தான் கட்டமைக்கும் விண்வெளி நிலையத்துக்கு 'தியான்ஹே' (Tianhe)எனப் பெயரிட்டுள்ளது.

ஸ்பெயின்




## அழுவதற்கு அறை அமைத்த ஸ்பெயின்

ஸ்பெயினில் பொது மக்களின் உளவியல் ரீதியிலான பிரச்சினைகளைப் போக்க, 'க்ரையிங் ரூம்' முறையை அந்நாட்டு மனநல நிபுணர்கள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இன்றைய இயந்திர மயமான வாழ்க்கை முறையில், மக்கள் அதிக மன அழுத்தம், இறுக்கம், சோர்வு, மன உளைச்சல் உள்ளிட்ட உளம் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஆளாவதாக உளவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களை 'க்ரையிங் ரூம்' என்ற அறையில் அடைத்து, தான் விரும்பும் நபரைத் தொடர்பு கொண்டு, கண்ணீர் விட்டுப் பேச வைப்பதால் மன இறுக்கம் உள்ளிட்ட உளவியல் ரீதியிலான பிரச்சினைகள் குறைவதாக மனநல நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்

## இஸ்ரேலில் செவ்வாய்க் கிரகம்

செவ்வாய்க் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்புவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து இஸ்ரேலில் உள்ள ராமோன் பள்ளத்தாக்கில் ஆராய்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனை இஸ்ரேல் விண்வெளி மையம், ஆஸ்திரிய சங்கம், உள்ளூரில் உள்ள டி-மார்ஸ் என்ற அமைப்பு ஆகியவை இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

செவ்வாய்க் கிரகத்தைப்போன்றே சிவப்பு நிறத்தில் உள்ள இப் பகுதியில் மலைப்பகுதியைக் குடைந்து ஆயிரத்து 300 சதுர அடியில் வீடுபோன்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதில், ஒஸ்திரியா, இஸ்ரேல், ஜேர்மனி, நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 5 விண்வெளி வீரர்களும், ஒரு விண்வெளி வீராங்கனையும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

செவ்வாய்க் கிரகத்தில் வாழ்வதற்கான சூழல் உள்ளிட்டவை குறித்து 25 நாடுகளைச் சேர்ந்த 200 ஆராய்ச்சியாளர்கள் தயாரித்துள்ள 20-க்கும் மேற்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த ஆராய்ச்சியின்போது, விண்வெளி வீரர், வீராங்கனைகளின் நடவடிக்கைகள் அனைத்தும் வீடியோவில் பதிவுசெய்யப்படும்.





## மாடி வீட்டைத் தூக்கி சென்ற தம்பதிகள்


கனடாவைச் சேர்ந்த தம்பதியொன்று, தமது வீட்டை விட்டுக் குடிபெயர்ந்த போது, தாம் வாழ்ந்த வீட்டையும் பெயர்த்துக் கொண்டு சென்ற விநோத சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த தம்பதியினர், தாம் இடம் பெயர்ந்து சென்று வாழத் தீர்மானித்த பின்னர், தாம் ஆசையுடன் கட்டிய இரண்டு மாடி வீட்டையும் விட்டுச் செல்ல மனமின்றியே, இவ்வாறு வீட்டை மிதக்கும்படி தயார் செய்து, ஆற்றில் படகுகள் உதவியுடன் தள்ளிக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், குறித்த வீட்டின் புகைப்படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல்

## 85 வயதில் இளங்கலை பட்டம் பெற்ற மூதாட்டி

73 ஆண்டுகளுக்கு முன்னர், பாடசாலைப் படிப்பை நிறுத்திய பாலஸ்தீன பெண்ணொருவர், தனது 85ஆவது வயதில் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ள சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.



1948ஆம் ஆண்டு இஸ்ரேலியப் படையெடுப்பின் போது ஜிஹாத் புட்டோ என்ற குறித்த பெண், தனது 12 வயதில் நப்லஸ் நகரை விட்டுக் குடும்பத்துடன் வெளியேறினார்.

நாசரேத் நகரில் மணமுடித்து 7 குழந்தைகளுக்குத் தாயான இவர், கல்வி மீது கொண்ட அலாதி பிரியத்தால், தனது 81 ஆவது வயதில் பாடசாலைக் கல்வியை மீண்டும் தொடர்ந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 19 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.